விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 187 வள்ளுவர் ஆண்டு 2056 ஆனி 10 செவ்வாய்க்கிழமை (24.06.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

உங்கள் ஆரோக்கியம் எமது நோக்கம்
Royal றோயல்
சுத்தமான பசு நெய்
ஆய்வுகூடத்தில் தரம்
பரிசோதிக்கப்பட்டு பொதியிடப்படுகிறது.
Marketed By:- (C-3257)
சிவா நறுமணப் பூங்கா®
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சத்திரச்சந்திக்கு அருகாமை)
தொ.பே : 021 2222 567

### திருவுளச்சீட்டு மூலம்
## சாவகச்சேரி பிரதேச சபையை கைப்பற்றியது தமிழரசுக் கட்சி



தவிசாளரானார் பொன்னையா குகதாசன்

(யாழ்ப்பாணம்)

திருவுளச்சீட்டு மூலம் சாவகச்சேரி பிரதேச சபையை இலங்கைத் தமிழரசுக் கட்சி கைப்பற்றியதோடு அதன் தவிசாளராக பொன்னையா குகதாசன் தெரிவானார்.

சாவகச்சேரி பிரதேச சபை 15ஆம் பக்கம் பார்க்க

### சிரியா, கட்டார், ஈராக்கில் அமைந்துள்ள
## அமெரிக்க இராணுவத் தளங்கள் மீது ஈரான் பதில் தாக்குதல்
### தொடரும் உலகப் போர் பதற்றம்

(டமாஸ்கஸ்)

சிரியா, கட்டார், ஈராக்கிலுள்ள அமெரிக்க இராணுவத்தளங்கள் மீது ஈரான் தாக்குதல் மேற் கொண்டுள்ளதாக ஈரானின் அரச ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

அமெரிக்கா ஈரான் 15ஆம் பக்கம் பார்க்க




### இலங்கை வந்தடைந்தார்
# ஐ.நா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர்

(கொழும்பு)

- யாழ்ப்பாணம், திருகோணமலைக்கு நாளை விஜயம் செய்வார்.
- யாழில் எம்.பிக்களை சந்திப்பதற்கு ஏற்பாடு.
- செம்மணி மனிதப் புதைகுழியை பார்வையிடுவார் என்று அதிக எதிர்பார்ப்பு.

(02ஆம் பக்கம் பார்க்க)



### மிளகாய்த்தூள் வீசிவிட்டு
## யாழில் குடும்பஸ்தர் மீது கூரிய ஆயுதத்தால் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

மிளகாய்த் தூள் வீசிவிட்டு யாழில் குடும்பஸ்தர் மீது கூரிய ஆயுதத்தால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கட்டுடையில் நேற்று இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த குடும்பஸ்தர் 02ஆம் பக்கம் பார்க்க

## வடமராட்சி அம்பனில் வாள்வெட்டுத் தாக்குதல்
### மூவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி அம்பனில் இடம்பெற்ற வாள்வெட்டுத் தாக்குதலில் மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு இச்சம்பவம் இடம்பெறுள்ளது.

அம்பன் பகுதியிலிருந்து 15ஆம் பக்கம் பார்க்க

### இலங்கையில் எரிபொருள்
## நெருக்கடி இல்லை
### நிலைமையைக் கட்டுப்படுத்த நடவடிக்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

(கொழும்பு)

இஸ்ரேல் - ஈரான் போரை அடுத்து ஏற்பட்ட பெற்றோல் தட்டுப்பாடு தொடர்பில் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஒரு அறிவிப்பை விடுத்துள்ளது.

அந்த அறிவிப்பில் உள்ளதாவது,

15ஆம் பக்கம் பார்க்க

## செம்மணியில் ஏற்றப்பட்டது 'அணையா தீபம்'





02ஆம் பக்கம் பார்க்க

### எமக்கு சர்வதேச நீதி வேண்டும்
## அநுர அரசும் தமிழ் மக்களை ஏமாற்றுகிறது - செம்மணியில் சிறிதரன்

(யாழ்ப்பாணம்)

சிங்கள அரசாங்கங்களால் நாம் ஏமாற்றப்பட்டுக் கொண்டிருக்கிறோம். தற்போதைய அநுர அரசும் தமிழ் மக்களை ஏமாற்றி வருகிறது. எங்களுக்கு நடந்தது இனப் படுகொலை, தமிழ் மக்களுக்கு நீதி விசாரணை வேண்டும். அது சர்வதேச நீதி விசாரணையாக இருக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தெரிவித்தார்.

02ஆம் பக்கம் பார்க்க

### மீசாலையில்
## மூச்சுவிட கஷ்டப்பட்ட எட்டு மாத குழந்தை மரணம்

15ஆம் பக்கம் பார்க்க

## பச்சிலைப்பள்ளி பிரதேச சபை தமிழரசுக் கட்சி ஆட்சி
### தவிசாளராக சுரேன் தெரிவு



(கிளிநொச்சி)

கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேச சபையை இலங்கைத் தமிழரசுக் கட்சி கைப்பற்றியதோடு அதன் தவிசாளராக சு.சுரேன் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

15ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழில்...

பிள்ளைகளை பாடசாலையில் விட்டு விட்டு திரும்பி வந்துகொண்டிருந்த வேளை ஒரு மோட்டார் சைக்கிளில், முகங்களை மறைத்தவாறு வந்த இருவர் குறித்த குடும்பஸ்தரின் கண்களினுள் மிளகாய்த் தூளை வீசிவிட்டு கூரிய ஆயுதத்தால் தாக்குதல் மேற்கொண்டு விட்டு அங்கிருந்து தப்பிச் சென்றனர்.

படுகாயமடைந்த குறித்த நபர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மானிப்பாய் பொலிஸார் இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,104)

## அநுர அரசும்...

யாழ். செம்மணியில் நேற்று திங்கட்கிழமை (23) ஆரம்பித்த அணையா விளக்குப் போராட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனை தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

இப்போராட்டமானது உலகத்தின் கண்களைத் திறப்பதற்கான போராட்டமாகும். எங்களுக்கு நடந்தது இனப் படுகொலை, தமிழ் மக்களுக்கு நீதி விசாரணை வேண்டும். அது சர்வதேச நீதி விசாரணையாக இருக்க வேண்டும்.

சிங்கள அரசாங்கங்களால் நாம் ஏமாற்றப்பட்டுக் கொண்டிருக்கிறோம். தற்போதைய அநுர அரசும் தமிழ் மக்களை ஏமாற்றிவருகிறது. கடந்த கால ஆட்சியாளர்களுக்கு சளைத்தவர்கள் நாம் அல்ல என்ற வகையில் அண்மைய நடவடிக்கைகள் அமைந்து இருக்கின்றன.

எனவே இப்போராட்டமானது சர்வதேச விசாரணையை வலியுறுத்திய வகையிலும், இங்கு கண்டெடுக்கப்படுகிற எலும்புக் கூடுகளுக்கு நீதி விசாரணை வேண்டியும் இப்போராட்டம் இடம்பெற்று வருகிறது.

இந்தப் போராட்டத்தில் திரளுகின்ற மக்கள் திரட்சி, உலகத்தின் கண்களையும் உலகத்தின் மனச்சாட்சிகளையும் திறக்கும். எனவே இப்போராட்டத்திற்கு அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் என்றார். (ம-7)

## செம்மணி...

செம்மணி மனிதப் புதைகுழிக்கு நீதிகோரி "ஆணையா தீபம்" நேற்று ஏற்றப்பட்டது.

குறித்த போராட்டம் செம்மணியில் 1996 களில் சருகாகிப் போன கிருசாந்தியின் உறவினரால் சுடரேற்றி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மக்கள் செயல் அமைப்பின் ஏற்பாட்டில் சட்டத்தரணி வைஸ்ணவி சண்முகநாதன் தலைமையில், முன்னெடுக்கப்பட்டுள்ள இந்தப் போராட்டத்தில் சமயத் தலைவர்கள், அரசியல் தலைவர்கள், அரசியல் பிரமுகர்கள், பொது அமைப்பின் பிரதிநிதிகள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து மலர் தூவி அஞ்சலித்தனர்.

குறிப்பாக செம்மணி மண்ணில் புதையுண்டுபோன உறவுகளுக்கு, நீதி வேண்டிய போராட்டமாக,

"அணையா தீபம்" என்ற பெயரில் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

நேற்றுக் காலை 10.10 மணியளவில் ஆரம்பிக்கப்பட குறித்த போராட்டமானது 23,24,25 ஆகிய 3 நாட்களுக்கு அகிம்சை வழியில் முன்னெடுக்கப்படவுள்ளது.

குறிப்பாக காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் இழந்த உறவுகளுக்கான நீதியைத் தேடி சர்வதேசத்தின் கவனத்தை ஈர்க்கும் வகையில் இப் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

யாழ் வருகைதரவுள்ள ஐ.நா உயர் அதிகாரியின் பார்வைக்கு பிரச்சினையின் ஆழத்தை வலியுறுத்துவதற்காக முன்னெடுக்கப்படும் இந்தப் போராட்டத்திற்கு தமிழ் மக்கள், பொது அமைப்புகள், சமூக ஆர்வலர்கள் கலந்துகொண்டு போராட்டத்திற்கு வலுச்சேர்க்க வேண்டும் என சட்டத்தரணி வைஷ்ணவி சண்முகநாதன் வலியுறுத்தியுள்ளார். (ம-7,33,104)

## ஐ.நா மனித...

ஐ.நா. மனித உரிமைகள் உயர் ஆணையர் வோல்கர் டர்க் நேற்று மாலை இலங்கை வந்தடைந்தார்.

அவர் ஜூன் 26 வரை இலங்கைக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ளதாக வெளியுறவு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சு தெரிவித்துள்ளது.

2016ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஐ.நா. மனித உரிமைகள் உயர் ஆணையர் இலங்கைக்கு மேற்கொள்ளும் முதல் பயணம் இதுவாகும்.

விஜயத்தின் போது, அவர் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க மற்றும் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய ஆகியோரைச் சந்திக்கவுள்ளார்.

மேலும், வெளியுறவு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர், பல அமைச்சரவை அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், சிரேஷ்ட அரச அதிகாரிகள், மதத் தலைவர்கள், சிவில் சமூகப் பிரதிநிதிகள் மற்றும் இராஜதந்திர சமூக உறுப்பினர்களையும் சந்திக்கவுள்ளார்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுடன் கலந்துரையாடலும் திட்டமிடப்பட்டுள்ளதாக வெளியுறவு அமைச்சு தெரிவித்துள்ளது.

வோல்கர் டர்க், ஸ்ரீ தலதா மாளிகைக்கு வழிபாடு நடத்தவும், மல்வத்தை மற்றும் அஸ்கிரி மகாநாயக்கர்களைச் சந்திக்கவும் திட்டமிட்டுள்ளார்.

அத்துடன் யாழ்ப்பாணம் மற்றும் திருகோணமலைக்குச் சென்று வடக்கு மற்றும் கிழக்கு மாகாண ஆளுநர்களைச் சந்திக்கவும் திட்டமிடப்பட்டுள்ளதாக வெளியுறவு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சு தெரிவித்துள்ளது. (ம-7)


## முகப்புவயல் முருகனுக்கு இன்று தேர்

(மண்டைதீவு)

மண்டைதீவு முகப்பு வயல் அருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் தேர்த்திருவிழா இன்று (24) செவ்வாய்க்கிழமை இடம்பெறும்.

இன்று முற்பகல் 10.30 மணிக்கு சுவாமி தேரில் ஆரோகணிப்பார். (ந)

# மரண அறிவித்தல்



மலர்வு 1936.12.01 உதிர்வு 2025.06.21

## தம்பிப்பிள்ளை இராஜேஸ்வரி (பவளம்)

வளாக வீதி, திருநெல்வேலியினைப் பிறப்பிடமாகவும் தாமரை வீதி வண்ணார்பண்ணையினை வதிவிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை இராஜேஸ்வரி(பவளம்) அவர்கள் கடந்த 21.06.2025 சனிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - நாகம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வியும் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பொற்கொடி, சந்திரகோபால் மற்றும் இராஜகோபால், கமலாம்பிகை(லண்டன்), ஜெயராணி ஆகியோரது பாசமிகு சகோதரியும் காலஞ்சென்ற குகதாசன்(டென்மார்க்), ரஞ்சிதமலர், சிவதாசன்(லண்டன்), காலஞ்சென்ற ஜெகதாசன்(பிரான்ஸ்), ரஞ்சனாதேவி(பிரான்ஸ்), விஜியலட்சுமி(விஜி - நோர்வே), தேவதாசன், ஜெயலட்சுமி(உசா-லண்டன்) ஆகியோரது பாசமிகு தாயாரும் மங்களேஸ்வரி(டென்மார்க்) காலஞ்சென்ற ஏளாலசிங்கம் மற்றும் வதனராணி(லண்டன்), சுகந்தி(பிரான்ஸ்), நாகதாசன் (பிரான்ஸ்), மகேந்திரன்(நோர்வே), யோகேஸ்வரன்(லண்டன்) ஆகியோரது பாசமிகு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 24.06.2025 இன்று செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல. 42, தாமரை வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

தகவல் :
குடும்பத்தினர்
076 665 5879 (ஏ.ஜெருபன்)
077 231 1568 (ஏ.ஜெயபிரியங்கன்)

(4819)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிபொருட்களை பதுக்கி வைக்காதீர்கள்!

## பெற்றோலிய விநியோகஸ்தர் சங்கம் வலியுறுத்து

**(கொழும்பு)**

**தேவையில்லாமல் எரிபொருளை பதுக்கி வைப்பதைத் தவிர்க்குமாறு பெற்றோலிய விநியோகஸ்தர்கள் சங்கம் பொதுமக்களை வலியுறுத்தியுள்ளது.**

மத்திய கிழக்கில் நிலவும் சூழ்நிலை காரணமாக எதிர்காலத்தில் பெற்றோலிய விலைகள் அதிகரிக்கும் அபாயம் இருப்பதாக சங்கத்தின் துணைத் தலைவர் குசும் சந்தனாயக்க தெரிவித்தார்.

இவ்வாறான போர் சூழல் ஏற்பட்டால் எரிபொருள் இல்லாமல் போகாது. விலைகளில் மட்டுமே மாற்றம் ஏற்படும்.

இது எங்களுடைய பிரச்சினை அல்ல. உலகின் சக்திவாய்ந்தவர்களின் பிரச்சினையாகும்.

அடுத்த சில மாதங்களுக்கு எரிபொருளை இறக்குமதி செய்வதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் ஏற்கனவே செய்து வருகின்றது என அவர் தெரிவித்தார். (நி)

# இந்த வருடத்திற்குள் 1800 கிராமிய வீதிகள் அபிவிருத்தி செய்யப்படும்

## அமைச்சர் பிமல் தெரிவிப்பு



(கொழும்பு)

இந்த வருட இறுதிக்குள் 1800 கிராமிய வீதிகளை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுக விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

கிராமிய வீதிகளை அபிவிருத்தி செய்வதற்காக ஜனாதிபதியின் விசேட பணிப்புரையின் கீழ் 5000 மில்லியன் ரூபாய் மேலதிகமாக ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இந்த இலக்கை நோக்கிய இந்த அபிவிருத்தி திட்டத்தின் மூலம் நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுவதே அரசாங்கத்தின் நோக்கம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். கிராமிய வீதிகள் அபிவிருத்தி தேசிய வேலைத் திட்டத்தை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு அவிசாவளைப் பகுதியில் நடைபெற்றது. இந்நிகழ்வை உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைத்து அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். சீதாவக்க பிரதேச செயலாளர் பிரிவு உள்ளிட்ட பல கிராமிய வீதி அபிவிருத்தி திட்டங்கள் அவரது தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டன. சமகாலத்தில் நாடளாவிய ரீதியில் 57 பிரதேசங்களில் இந்த திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. (நி)

# நிதி அமைச்சின் செயலராக ஷர்ஷன சூரியப்பெரும

(கொழும்பு)

நிதி அமைச்சின் புதிய செயலாளராக ஹர்ஷன சூரியப்பெரும நியமிக்கப்பட்டு நேற்று கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார். நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சராக கடமையாற்றிய அவர் சமீபத்தில் அந்த பதவியில் இருந்தும் பாராளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்தும் விலகினார். நிதியமைச்சின் முன்னாள் செயலாளர் மஹிந்த சிறிவர்தன அந்த பதவியில் இருந்து ஓய்வு பெற்றதை தொடர்ந்து அவர் இந்த பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார். (நி)

# யாழ்ப்பாணம் மாநகரசபை

## நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவகால தற்காலிக கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான

## கேள்வி அறிவித்தல் - 2025

நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவ கால தற்காலிக கடைகள் அமைப்பதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன. கேள்விகளுக்கான விண்ணப்பப் படிவங்களை மாநகர சபையின் நானாவித இறைவரிப்பகுதியில் கட்டணம் செலுத்திப் பெற்றுக்கொள்ள முடியும்.

- கேள்விப்படிவக்கட்டணம் : **ரூபா 1,000.00 + Vat 18%**
- கேள்விப்படிவம் விநியோகிக்கும் திகதி:- **24.06.2025** தொடக்கம் **08.07.2025** வரை (ஞாயிற்றுக் கிழமை தவிர்ந்த நாட்களில் மு.ப **9.00 - பி.ப 2.30** மணி வரை)
- கேள்விப்படிவம் ஏற்றுக்கொள்ளல் :- **09.07.2025** முற்பகல் **10.00** மணிவரை
- கேள்விப்படிவம் திறத்தல் :- **09.07.2025** முற்பகல் **10.00** மணிக்கு
- மீளளிக்கக்கூடிய வைப்புப்பணம் :- ஆரம்ப கேள்வித் தொகையின் 2% அல்லது ரூபா 2,000.00 இத் தொகைகளில் கூடிய தொகை

❖ விண்ணப்பப் படிவங்கள் யாவும் ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என முகவரியிட்டு நானாவித இறைவரி பகுதியில் வைக்கப்படும் கேள்விப் பெட்டியினுள் 09.07.2024 முற்பகல் 10.00 மணிக்கு முன்னர் சேர்க்கப்படல் வேண்டும்.

❖ கேள்வி திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர் அல்லது அவர் சார்பில் அவரால் கடிதம் மூலம் அனுமதியளிக்கப்பட்ட ஒருவர் சமூகமளித்தல் வேண்டும்.

❖ கேள்வியில் சித்தி பெற்றவர்கள் தாங்கள் சித்தி பெற்ற சகல கடைகளுக்குமான இடத்திற்குரிய கேள்வித் தொகையினையும் அதற்கான 18% Vat இனையும் 14.07.2025ஆம் திகதி 2.30 மணிக்கு முன்னர் முன்னரங்கப் பகுதியில் முழுமையாக செலுத்தி பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொள்வதன் மூலம் குறிக்கப்பட்ட கடைகளிற்கான இடத்தினைப் பெற்றுக்கொள்ளலாம். தவறும் சந்தர்ப்பத்தில் தங்களால் விண்ணப்பிக்கப்பட்ட சகல விண்ணப்பங்களும் இரத்துச்செய்யப்படுவதுடன் மீளளிக்ககூடிய வைப்புப்பணமும் மீளளிக்கப் படமாட்டாது.

❖ **கேள்வி கோரலில் சித்தியடைந்தோர் 14.07.2025ஆம் திகதி 2.30 மணிக்கு முன்னர் கேள்வித் தொகையினைச் செலுத்தத் தவறிய கடைகளுக்கான மீளளிக்கக்கூடிய வைப்புப் பணம் மீளளிக்கப் படமாட்டாது.**

❖ மீளளிக்கக் கூடிய வைப்புப் பணத்தை மீளளிக்க ஏதுவாக வைப்புதாரரின் வங்கி கணக்குப் புத்தக பிரதி பெயர், கணக்கிலக்கம், வங்கி விபரம் உள்ளடங்கியபக்கம் இணைக்கப்படவேண்டும்.

❖ 30.11.2025ஆம் திகதிக்கு முன் உரிய ஆவணங்களை சமர்ப்பித்து மீள பெற்றுக்கொள்ளாத மீளளிக்கக்கூடிய வைப்புப் பணம் சபை வருமானமாக மாற்றப்படும்.

❖ மேலதிக விபரங்கள் மற்றும் நிபந்தனைகளை மாநகரசபை நானாவித இறைவரிப்பகுதியில் பெற்றுக்கொள்வதுடன் வரைபடத்தையும் பார்வையிடலாம்

❖ கேள்விச் சபையின் முடிவே இறுதியானது.

**மாநகர ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம்** (c-3254)

# மத்தியகிழக்கில் பதற்றத்தை தணிக்குமாறு இலங்கை கோரிக்கை

(கொழும்பு)

மத்திய கிழக்கு பிராந்தி யத்தில் நிலவும் பதற்றத்தைத் தணிக்க வலுவான நடவடிக்கைகளை எடுக்குமாறு அனைத்து தரப்பினரிடமும் இலங்கை வேண்டுகோள் விடுத்துள்ளது. இது தொடர்பில் வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில்,

மத்திய கிழக்கின் சமீபத்திய நிலவரங்கள் குறித்து இலங்கை மிகவும் கவலை கொண்டுள்ளது.

பதற்ற நிலையைத் தணிக்க உறுதியான நடவடிக்கைகளை எடுக்குமாறு அனைத்து தரப்பினரையும் நாம் தொடர்ந்து கோரி வருகிறோம்.

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் ஸ்திரத்தன்மையை உறுதி செய்யும் நோக்கில், தொடர்புபட்ட அனைத்து தரப்பினரும் பேச்சுவார்த்தைக்கு வரவேண்டுமென்பதுடன், பிராந்தியத்தில் அமைதியை நிலைநாட்ட வும், அதனைப் பேணவும் தீவிர இராஜ தந்திர முயற்சிகளில் ஈடுபடுவது அவசியமாகின்றது என்று சுட்டிக்காட்டியுள்ளது. (நி)

# சட்டவிரோத சொத்துக்கள் தொடர்பில் சி.ஐ.டி விசாரணை ஆரம்பம்

(கொழும்பு)

கொழும்பில் ஆடம்பர சொத்துக்களை வைத்திருக்கும் பல அரசியல்வாதிகள் மீது விசேட விசாரணை தொடங்கப்பட்டுள்ளதாக இலங்கை பொலிஸ் துறை தெரிவித்துள்ளது.

குற்றப் புலனாய்வுத் துறையின் சட்டவிரோத சொத்துக்கள் விசாரணைப் பிரிவால் இந்த விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

பொலிஸாரின் கூற்றுப்படி, விசாரணைக்கு உட்படுத் தப்படும் அரசியல்வாதிகளில் பல முக்கிய முன்னாள் அமைச்சர்களும் அடங்குவர்.

தற்போதைய பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் முன்னாள் அமைச்சர்கள் உட்பட 28 அரசியல்வாதிகளின் சொத்துக்கள் குறித்து சி.ஐ.டி விசாரணையைத் தொடங்கியுள்ளதாக தென்பகுதி பத்திரிக்கையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.


இது தொடர்பில் இலங்கை இராணுவத்தின் முன்னாள் தளபதி ஒருவரிடமும் விசாரணைகள் நடைபெற்று வருவதாக அறிக்கை கூறுகிறது.


சட்டவிரோதமாகச் சம்பாதித்த சொத்துக்கள் தொடர்பாக பல்வேறு தரப்பினரிடமிருந்து பெறப்பட்ட பல முறைப்பாடுகளின் அடிப்படையில் சி.ஐ.டி விசாரணையைத் தொடங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (நி)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# தாய்லாந்து மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் போட்டி இலங்கைக்கு 2 தங்கம் 2 வெள்ளிப் பதக்கங்கள்









தாய்லாந்தின் தலை நகர் பாங்கொக்கில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமான தாய்லாந்து பகிரங்க சுவட்டு. மைதான சம்பியன்ஷிப்பில் முதலாம் நாளன்று இலங்கை 2 தங்கப் பதக்கங்கங்களையும் 2 வெள்ளிப் பதக்கங்களை யும் வென்றெடுத்தது.

ஆண்களுக்கான 1500 மீற்றர் ஓட்டப் போட்டியில் ருசிரு சத்துரங்கவும் பெண்களுக்கான நீளம் பாய்தலில் நெத்மிக்கா மதுஷானி ஹேரத்தும் தங்கப் பதக்கங்களை வென்றெடுத்தனர்.

ஆண்களுக்கான 1500 மீற்றர் ஓட்டப் போட்டியை 3 நிமிடங்கள் 53.30 செக்கன்களில் நிறைவு செய்த இலங்கைக்கான முதலாவது தங்கப் பதக்கத்தை ருசிறு சத்துரங்க வென்று கொடுத்தார்.

பெண்களுக்கான நீளம் பாய்தலில் நெத்மிக்கா மதுஷானி ஹேரத் 6.37 மீற்றர் தூரம் பாய்ந்து தங்கப் பதக்கத்தை சுவீகரித்தார்.

ஆண்களுக்கான 1500 மீற்றர் ஓட்டப் போட்டியில் மலையகத்தின் தலவாக் கொல்லையைச் சேர்ந்த விக்னராஜ் வக்சன் (3:54.72) வெள்ளிப்பதக்கத்தை வென்றெடுத்தார்.

அத்துடன் பெண்களுக்கான 1500 மீற்றர் ஓட்டப் போட்டியில் டபிள்யூ. கே. எல். ஏ. நிமாலி (4:32.39) வெள்ளிப் பதக்கத்தை வென்றெடுத் தமை குறிப்பிடத்தக்கது. (3)

# உலகக்கிண்ண கிரிக்கெட் தொடர்களில் பங்கேற்க தகுதி பெற்ற கனடா அணி



இந்தியா மற்றும் இலங்கையில், அடுத்த ஆண்டு ஐ.சி.சி “ரி-20“ உலகக் கோப்பையின் 10 ஆவது சீசன் நடைபெறவுள்ளது.

இதில் மொத்தமாக 20 அணிகள் பங்கேற்கின்றன. இந்தியா, இலங்கை, அவுஸ்திரேலியா, இங்கிலாந்து உள்ளிட்ட 12 அணிகள் நேரடியாகத் தகுதி பெற்றன. மீதமுள்ள இடங்களுக்கு தகுதிச் சுற்று நடத்தப்படுகிறது.

அமெரிக்க அணிகளுக்கான தகுதிச் சுற்று கனடாவில் நடைபெற்றது. இதில் கனடா, பெர்முடா, பஹாமாஸ், கேமன் தீவு என 4 அணிகள் பங்கேற்றன. ஒவ்வொரு அணியும், மற்றைய அணிகளுடன் தலா 2 முறை விளையாட வேண்டும். முடிவில், புள்ளிப்பட்டியலில் முதலிடம் பிடிக்கும் அணி உலகை கோப்பைக்கு தகுதி பெறும்.

கிங் சிட்டியில் நடந்த லீக் போட்டியில் கனடா அணி 5 போட்டியிலும் வெற்றி பெற்று 10 புள்ளிகளுடன் முதலிடத்தை உறுதி செய்தது. இதனால் “ரி-20“ உலகக் கோப்பைக்கு தகுதி பெற்ற 13 ஆவது நாடாகக் கனடா உள்வாங்கப்பட்டுள்ளது. (3)

# ஐ.சி.சி விதிமுறைகளை மீறினார் இந்திய அணித்தலைவர் சுப்மன் கில்



இந்திய மற்றும் இங்கிலாந்திற்கு இடையேயான 5 டெஸ்ட் போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் போட்டி இங்கிலாந்தில் நடைபெற்றுவரும் நிலையில் இந்த ஆட்டத்தில் இந்திய டெஸ்ட் அணியின் தலைவர் சுப்மன் கில் விதிமுறைகளை மீறியதாக சர்ச்சை எழுந்துள்ளது. அதாவது முதல் நாள் போட்டியில், சுப்மன் கில் தனது காலில் கருப்பு நிற காலுறை அணிந்து விளையாடியுள்ளார்.

டெஸ்ட் போட்டிகளில் இவ்வாறு கருப்பு நிற காலுறை அணிந்து விளையாடுவது ஐ.சி.சியின் ஆடைக் கட்டுப்பாட்டு விதியை மீறும் செயலாகும். ஐ.சி.சி விதிகளின்படி வெள்ளை அல்லது கிரீம் அல்லது லேசான சாம்பல் நிறம் ஆகிய வண்ணங்களில் மட்டுமே காலுறை அணிய அனுமதிக்கப்பட்டுள்ளது.

விதிகளை மீறிய செயல் என்பதால், போட்டிக் கட்டணத்தில் இருந்து 10 முதல் 20 சதவீதம் வரை அபராதம் விதிக்கப்படலாம் என கூறப்படுகிறது. (3)

# இலங்கை - பங்களாதேஷ் கிரிக்கெட் தொடர் டிக்கெட் விற்பனை இன்று முதல் ஆரம்பம்

பங்களாதேஷ் மற்றும் இலங்கை அணிகளுக்கு இடையில் நடைபெறவுள்ள மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட ஒருநாள் மற்றும் ரி-20 சர்வதேச தொடருக்கான டிக்கெட் இன்று முதல் ஒன்லைனில் விற்பனை செய்யப்படவுள்ளது.

ஒருநாள் மற்றும் ரி20 சர்வதேச தொடருக்கான டிக்கெட்டுகளை நாளை முதல் இலங்கை கிரிக்கெட் சபையின் இணையத்தளத்துக்குள் பிரவேசித்து பெற்றுக்கொள்ள முடியும். அதேபோல நேரடி டிக்கெட் விற்பனை ஜூன் 29ஆம் திகதி ஆரம்பமாகும்.

இதற்கிடையில், நேரடி டிக்கெட்டுகளை கொழும்பு வித்தியா மாவத்தையிலும் (ஜூன் 29 முதல்), கண்டி பல்லேகலை சர்வதேச கிரிக்கெட் மைதானத்திலும் (ஜூலை 6 முதல்), மற்றும் தம்புள்ள ரங்கிரி சர்வதேச கிரிக்கெட் மைதானத்திலும் (ஜூலை 11 முதல்) உள்ள டிக்கெட் விற்பனை நிலையங்களுக்கு சென்று பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டு அணிகளுக்கும் இடையிலான ஒருநாள் தொடர் அடுத்த மாதம் 2ஆம் திகதியும், ரி20 தொடர் 10ஆம் திகதியும் ஆரம்பமாகிறது. டிக்கெட்டுக்கான ஆரம்ப விலை 500 ரூபா என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# பெர்லின் ஓபன் டென்னிஸ் சம்பியன் வென்றார் மார்கெட்டா



பெண்கள் மட்டும் பங்கேற்கும் பெர்லின் ஓபன் டென்னிஸ் தொடர் ஜேர்மனியில் நடைபெற்றது.

நேற்று முன்தினம் நடந்த ஒற்றையர் பிரிவு இறுதிச் சுற்றில் சீன வீராங்கனை வாங் ஜின் யு , செக் நாட்டின் மார்கெட்டா வாண்ட்ரசோவா உடன் மோதினார். இதில் சிறப்பாக ஆடிய மார்கெட்டா 7-6 (12-10) என முதல் செட்டை வென்றார். 2ஆவது செட்டை வாங் ஜின் யு 6-4 என வென்றார்.

வெற்றியாளரை நிர்ணயிக்கும் 3ஆவது செட்டை 6-3 என்ற செட் கணக்கில் வென்று சம்பியன் பட்டம் பெற்று அசத்தினார். (3)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


# முன்னாள் எம்.பி சஜினை கைது செய்ய பிடியாணை உத்தரவு

(கொழும்பு)

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்தனவை கைது செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் நேற்று பிடியாணை பிறப்பித்துள்ளது.

சஜின் வாஸ் குணவர்தன 2010 - 2012 காலப்பகுதிகளில் அரசாங்கத்துக்கு 369 இலட்சம் ரூபா வருமான வரி செலுத்தவில்லை என கூறி, சஜின் வாஸ் குணவர்தனவுக்கு எதிராக உள்நாட்டு இறைவரி திணைக்கள ஆணையாளர் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

ஆனால் சஜின் வாஸ் குணவர்தன இந்த வழக்கு மீதான விசாரணைகளுக்காக நீதிமன்றில் ஆஜராகாமல் இருந்துள்ளார். இதனை கருத்தில் கொண்ட நீதவான் சஜின் வாஸ் குணவர்தனவை கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு பிடியாணை பிறப்பித்துள்ளார். (நி)



## ஆதனப் பெயர்மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் 8 பருத்தித்துறை வீதி 4 ஆம் ஒழுங்கை. ஆதன இலக்கம் 26/5 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் சொந்தக்காரர் என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம், ஆனைப்பந்தி தம்பையா வல்லிபுரநாதன் பெண் சின்னம்மா தம்பையா தம்பிராஜா ஆகியோர் 10.02.1958 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு சூசைப்பிள்ளை தனபாலசிங்கம் முகதாவில் 2351 ஆம் நிறைவேற்றப்பட்ட சீதன உறுதி மூலம் யாழ்ப்பாணம், ஆனைப்பந்தி இராசையா கதிரவேற்பிள்ளை பெண் இராசமலரிற்கு சீதனமாக கையளித்துள்ளார்.

பின்னர் குறித்த ஆதனம் யாழ்ப்பாணம் கொக்குவில் கிழக்கு செம்பியன் ஒழுங்கையைச் சேர்ந்த இராசையா கதிரவேற்பிள்ளை பெண் இராசமலர் அவர்கள் 21.11.1986 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு அனுஷியா நடேசலிங்கம் முகதாவில் 218 ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட சீதன உறுதி மூலம் இலகடி காரைநகர் திருவேங்கடம் சந்திரசோதி பெண் சித்திராவிற்கு சீதனமாக கையளித்துள்ளார்.

### ஆதன அட்டவணை

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை வட கிழக்கு இறை **"ஆனைக்காரன் குறுவிலத்தோட்டம்"** நிலப்பரப்பு மூன்று இதில் மேற்கு பக்கமாக ஒன்றும் (1) குளி ஒன்பதும் (ஒன்றரைப்பரப்பு) அதனுள் அடங்கிய கல்வீடும் இதற்கு எல்லைகள்

வடக்கு :ஒன்பது அடி கை ஒழுங்கையும் கனகர் பெண் சாந்தமலரின் ஆதனம்
கிழக்கு :மிகுதி ஆதனம்
தெற்கு :பஞ்சாட்சரம் கேதாரகௌரியினதாதனம்
மேற்கு : குமாரசுவாமியினதும் பெண் கமலத்தினதும் ஆதனமும் சண்முகரத்தினம் பெண் வள்ளியம்மாவின் ஆதனமும் இதனுலடங்கலும், கிழக்கு பக்கமாக கிணற்றில் பங்கும் வழிவாய்க்கால் உரித்தும் வடக்கு பக்கமாக செல்லும் தண்ணீர் அள்ளும் உரித்தும்

தற்போது இவ்வாதனத்தைத் திருவேங்கடம் சந்திரசோதி பெண் சித்திரா தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ்வாதனத்திற்கு உரிமைகோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒருமாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமைகோராதவிடத்து குறித்த ஆதனமானது திருவேங்கடம் சந்திரசோதி பெண் சித்திரா என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத்தருகின்றேன்.

**ஆணையாளர்,மாநகர சபை,**
**யாழ்ப்பாணம்.** (சி-3253)

# தென்னை செய்கையாளர்களுக்கு மானிய விலையில் உரம்

(கொழும்பு)

தென்னை உற்பத்தியாளர்களுக்கு மானிய விலையில் தேங்காய் உரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.


பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சின் கீழ் உள்ள சிலாபம் பெருந்தோட்ட நிறுவனம் மற்றும் தென்னை பயிர்ச்செய்கை சபை ஆகியவை இணைந்து சிலாபம் பெருந்தோட்ட நிறுவனத்தின் பலுகஸ்வெவ தோட்டத்தில் இதற்கான நிகழ்வு நடைபெற்றுள்ளது.

மானிய விலையில் தேங்காய் உரத்தை வழங்கும் தேசிய திட்டத்திற்கு இணங்க தென்னை பயிர்ச்செய்கை சபை 146 தென்னை செய்கையாளர்களுக்கு 30 மெட்ரிக் தொன் தேங்காய் உரம் விநியோகித்துள்ளது. (நி)

**லங்கா மஹால் (PVT) LTD**
DHL உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை
அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை. (3236)
இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.
இந்தியா தொடர்புகளுக்கு :
**0091956615671 9**
WESTERN UNION WU MoneyGram Ria MONEY TRANSFER
ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு.
**077 839 3974**

## இதய அஞ்சலிகள்

மலர்வு-27.04.1941
உதிர்வு-20.06.2025



எமது நிலையத்தின் வளர்ச்சிக்கான செயற்பாடுகளில் தங்கள் வதிவிடம் முதற்கொண்டு தந்து உதவிகள் புரிந்த நற் குடும்பத்தோன்.

அமரர்
**கணபதிப்பிள்ளை மகேந்திரநாயகம்**

அவர்கட்கு எமது இதய அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(4685)

பாரதிதாசன் சனசமூக நிலைய சமூகம், அல்வாய்.

## இராசிபலன்

**24.06.2025**
**ஆனி 10, செவ்வாய்க்கிழமை**
**சதுர்த்தசி முன்னிரவு 7.02 மணிவரை**
**ரோகினி பிற்பகல் 1.01 மணிவரை**

**சுபநேரம் 10.25-11.55 மணிவரை**
**இராகுகாலம் 2.55-4.25 மணிவரை**
**அமிர்த சித்தம்**

சந்திராஷ்டமம்- சுவதி

**விஜயன்**

**மேஷம்** சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம், தன்னம்பிக்கையும், துணிவும் அதிகரிக்கும் யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காணும் நாள்.

**கடகம்** விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, அதிஷ்ட வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.

**துலாம்** சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, பொறுமையால் பெருமை காண வேண்டிய நாள், குடும்பத்தினரிடையே கோபமாகப் பேசி விட்டு பின்னர் மனம் வருந்தும் நிலையுண்டு.

**மகரம்** அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், உதிரி வருமானம் வந்து சேரலாம், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும்.

**ரிஷபம்** திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், போசன சுகமுண்டு.

**சிம்மம்** வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு, குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், உற்சாகமான நாள்.

**விருச்சிகம்** இரவு பகலாகப் பாடுபட்டதற்கேற்ப பலன் கிடைக்கும், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், எடுத்த காரியங்களில் முன்னேற்றமுண்டு.

**கும்பம்** பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், மனதில் தோன்றுவதைச் செய்வீர்கள், தாய்வழி ஆதரவு பெருகும், தொலைபேசித் தகவல்கள் மகிழ்ச்சி தரும், பயணங்களால் பலனுண்டு.

**மிதுனம்** புதிய நட்பால் பொருள் விரயங்கள் ஏற்படலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும்.

**கன்னி** எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், சாமர்த்தியமாகப் பேசி காரியங்கள் சாதிப்பீர்கள், புதிய திட்டங்கள் கைகூடும், பயணங்களால் பலனுண்டு, உறவினர்களின் ஒத்துழைப்புண்டு.

**தனுசு** இனத்தார் பகைமாற எடுத்த முயற்சிகள் கைகூடும், பாக்கிகள் வசூலாகும் வாய்ப்புண்டு, உடல் நலன் சீராகும், செய்தொழில் மேன்மையுண்டு, போசன சுகமுண்டு.

**மீனம்** பொது நல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், நேற்றைய பிரச்சினையொன்று இன்று நல்ல முடிவுக்கு வரும், போசன சுகமுண்டு.

**நண்பர்கள் மனிதனின் குணத்தைக் காட்டும் கண்ணாடி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளில் போட்டியிட்டு வெற்றி பெற்ற பெண்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விருந்தினர் விடுதி ஒன்றில் கடந்த 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ். சமூக செயற்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

(படம்-சிவசாந்தன்)

## "எங்கே அந்த வழி"வீதி நாடகம்



(யாழ்ப்பாணம்)

காவேரி கலாமன்றத்தின் ஏற்பாட்டில் "எங்கே அந்த வழி" என்னும் வீதி நாடகமானது அராலி முத்தமிழ் சனசமூக நிலை யத்தில் நடைபெற்றது.

சுற்றுச்சூழல் பாதுகாப்பும், அனர்த்தத்தில் இருந்து விடு படுதலும் எனும் கருப்பொரு ளில் இந்த வீதி நாடகம் ஏற்பாடு செய் யப்பட்டது.

இதில் யாழ்ப் பாணம் மாவட்ட அனர்த்த முகாமைத் துவ பிரிவின் பிரதிப் பணிப் பாளர் ரி.என். சூரியராஜா, காவேரி கலா மன்றத்தினர், முத்தமிழ் சன சமூக நிலை யத்தினர், சிறார்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.(8-104)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 250 | 300 | 250 | 350 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 160 | 170 | 200 |
| பச்சைமிளகாய் | 600 | 500 | 600 | 650 | 700 |
| தக்காளி | 350 | 400 | 350 | 350 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 280 | 300 | 250 | 220 | 250 |
| கோவா | 450 | 450 | 500 | 400 | 500 |
| கரட் | 600 | 650 | 500 | 650 | 600 |
| பூசணி | 140 | 180 | 160 | 150 | 200 |
| புடோல் | 120 | 150 | 150 | 130 | 250 |
| வாழைக்காய் | 120 | 120 | 100 | 80 | 120 |
| சின்ன வெங்காயம் | 350 | 150-350 | 300 | 400 | 450 |
| பெரிய வெங்காயம் | 140 | 160 | 140 | 110 | 150 |
| பாகற்காய் | 700 | 600 | 700 | 600 | 800 |
| வெண்டக்காய் | 150 | 120 | 150 | 120 | 300 |
| கருணைக் கிழங்கு | 300 | 350 | 300 | 250 | 450 |
| பயற்றங்காய் | 400 | 400 | 300 | 280 | 300 |
| லீக்ஸ் | 350 | 400 | 350 | 350 | 400 |
| பீற்றூட் | 300 | 300 | 350 | 380 | 400 |
| கறிமிளகாய் | 500 | 500 | 600 | 520 | 500 |
| முருங்கைக்காய் | 1200 | 1400 | 1000 | 1300 | 1200 |
| போஞ்சி | 700 | 700 | 700 | 480 | 800 |
| கத்தரிதம்புள்ள | 300 | 200 | 200 | -- | 300 |
| கீரை - 1 பிடி | 60 | 40-80 | 60 | 100 | 100 |
| தேசிக்காய் | 350 | 300 | 300 | 300 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 180 | 200 | 180 | 100-170 | 150-200 |
| இராசவள்ளி | 600 | 600 | 700 | 500 | 650 |
| வெங்காயப்பூ | 800 | 500 | 500 | 600 | 500 |
| முள்ளங்கி | 200 | 150 | 150 | 150 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 50 | 100 | 100 | 60 |
| வல்லாரை | 80 | 70 | 50 | 80 | 80 |
| ஈரப்பலா | 200 | 200 | 120 | -- | 200 |

# திண்மக் கழிவகற்றல் தொடர்பில் முறையிடலாம்

## வலி.மேற்கு பிரதேச சபை தவிசாளர்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் மேற்கில் திண்மக் கழிவு அகற்றல் சம் பந்தமான முறைப்பாடு களை 076 644 9919 என் னும் தொலைபேசி இலக் கத்துடன் தொடர்பினை ஏற் படுத்தி முறையிடலாம் என வலி மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் சண்முக நாதன் ஜெயந்தன் அறிவித்துள் ளார். அண்மையில் நடை பெற்ற பிரதேச சபைத் தவி சாளர் தெரிவில் இலங்கை தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிட்ட இவர் தவிசா ளராகத் தெரிவு செய்யப்பட்ட நிலையில் இந்த அறிவிப் பினை வெளியிட்டுள் ளார். (நி)

## இலவச நீரிழிவு பரிசோதனை முகாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நீரிழிவுக் கழகமும் நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தினரும் இணைந்து நடத்தும் இலவச நீரிழிவு பரிசோதனை முகாம் எதிர்வரும் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு மதியம் 1 மணிவரை திரு நெல்வேலி சந்தை வளா கத்தில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் நீரிழிவு பரிசோதனை, இரத்த அமுத் தம் ,உடல்திணிவுச்சுட்டி ஆகிய பரிசோதனைகள்மற்றும் வைத் திய ஆலோசனைகளும் இடம் பெறும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (8)

## வீதிகள் புனரமைப்பு ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

போக்குவரத்து நெடுஞ் சாலைகள் துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானங்கள் சேவைகள் அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் யாழ்ப்பாண மாவட்டத்தில் மேற்கொள் ளப்படவுள்ள வீதி அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் முதற் கட்டப் புனரமைப்பு வேலை கள் கடந்த 21 ஆம் திகதி தெல் லிப்பளை காங்கேசன்துறை கல்லூரி வீதியின் புனர மைப்பு மற்றும் பருத்தித் துறை மூன்றாம் வீதியின் புனர மைப்பு வேலைகளுடன் ஆரம்பமாகியது.

அந்த வகையில்காங்கேசன் துறை கல்லூரி வீதியின் புனரமைப்பு பணியின் ஆரம்ப நிகழ்வு கடற்றொழில் நீரியல் மற்றும்கடல்வளங்கள்அமைச் சரும் யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான கௌரவ இராம லிங்கம் சந்திரசேகர் தலை மையில் ஆரம்பமாகியது.

இந் நிகழ்வில் பாராளும ன்ற உறுப்பினர் வைத்திய கலாநிதி சண்முகநாதன் சிறிப வானந்தராஜா, போக்குவ ரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சின் மேலதிகச் செய லாளர் ஜீவநாதன் அவர்கள், அரசாங்க அதிபர் திரு.மருத லிங்கம் பிரதீபன் அவர்கள், வீதி அபிவிருத்தி அதிகார சபை யின் அதிகாரிகள்மற்றும் பொது மக்கள் கலந்து கொண்ட னர். (8-33)

## தொழிற்பயிற்சி கற்கைநெறிகளுக்கான
# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையானது 2025 ஆம் ஆண்டு இரண்டாம் அரை ஆண்டிற்கான முழு நேர கற்கை நெறிகள் 01.07.2025 ஆம் திகதி ஆரம்பமாகவுள் ளன. இக் கற்கைநெறிகள் யாழ்ப் பாணம், கைதடி, காரை நகர், வல்வெட்டித்துறை , பண்டத் தரிப்பு, சுன்னாகம் தொழிற் பயிற்சி நிலையங்களில் நடை பெற்று வருகின்றன.

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியலாளர் மின் னிணைப்பாளர், கனிய அள வையியலாளர், விருந்தினர் வரவேற்பாளர் , வெதுப்பாளர், சமையலாளர், நீர்க்குழாய் பொருத்துநர், முச்சக்கர வண்டி பொறிவலர், அலுமினியம் பொருத்துநர், உணவு மற்றும் குளிர்பானம் பரிமாறுபவர், குழ ந்தை பராமரிப்பாளர், பெண்கள் சிறுவர்களிற்கான ஆடை வடி வமைப்பாளர், சிகையலங்கரிப் பாளர், அழகுக் கலை வல்லுநர், விரைவு சேவை உணவு வழங் குநர், குளிரூட்டி மற்றும் வளி சீராக்கி திருத்துநர், மர வேலை தொழில்நுட்பவியலாளர், காய்ச்சி இணைப்பவர், கட்டட நிர்மாண உதவியாளர், போன்ற கற்கை நெறிகளுக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

இக் கற்கை நெறிகள் அனைத்தும் தேசிய தொழில் தகைமை மட்டம் 4 (NVQ-4)சான்றிதழுக்கான பயிற்சி நெறிகளாகும். கற்க விரும் புவோர் தங்கள் பதிவுகளை எதிர்வரும்27.06.2025 ஆம் திகதிக்கு முன்னர் மாவட்ட அலுவலகம்4 ஆம் மாடி, வீர சிங்கம் மண்டபம் இல. 12 கே. கே.எஸ் வீதி யாழ்ப் பாணம் அல்லது அனைத்து தொழிற்பயிற்சி நிலையங்க ளிலும் மேற் கொள்ள முடியும். மேலதிக விபரங்களினைப் பெற்றுக் கொள்வதற்கு 022 222 7949, 071 031 8737 , 077 613 9307 என்னும் தொலைபேசி இலக்கங்களு டன் தொடர்பு கொள்ள முடியும் என பிரதிப்பணிப்பாளர் கு. நிரஞ்சன் அறிவித்துள் ளார். (8)

## தென்னை அபிவிருத்தி சபையின்
# விசேட வேலைத்திட்டம்



(யாழ்ப்பாணம்)

தென்னைச் செய்கையை சேதப்படுத்தும் வெள்ளை ஈக் கள் உள்ளிட்ட பூச்சிகளை எதிர் த்துப் போராடுவதற்காக தென்னை அபிவிருத்தி சபை "தெங்கு செய்கை வாரம்" என்ற திட்டத்தைத் தொடங்கியுள்ளது.

யாழ்ப்பாணப் பகுதியை மையமாகக் கொண்டு, இந்தத் திட்டத்தின் முதல் கட்டத்தை அடுத்த மாதம் 14 ஆம் திகதி தொடங்க திட்டமிடப்பட்டுள் ளது. என்று தென்னை அபிவி ருத்தி சபையின் தலைவர் சுனிமல் ஜெயக்கொடி தெரி வித்தார்.

அனைத்து மாவட்டங்க ளிலும் தெங்கு செய்கை வாரம் திட்டத்தை அறிவித்து உடனடி நடவடிக்கையாக அதை செயற் படுத்த முடிவு செய்துள்ளோம். அதன்படி, ஜூலை 14 ஆம் திகதி இது செயற்படுத்தப்படும்.

வெள்ளை ஈயிற்கு தீர் வாக, யாழ்ப்பாண மாவட் டத்தில் உள்ள அனைத்து தென்னை மரங்களும் தண் ணீர் தெளிக்கப்பட்டு தூய்மை யாக்கப்படும். இது ஒரு பெரிய வேலை. ஆனால் இப்போது அதற்குத் தேவையான மனித வளத்தையும் இயந்திரங்க ளையும் நாங்கள் தயார் செய்து வருகிறோம் எனத் தெரிவித்தார். (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலை நிறுத்தத்தில் குதிக்கவுள்ள ஆசிரியர் பயிற்றுநர்கள்

(கொழும்பு)

இலங்கை கல்விச் சேவை விரிவுரையாளர் தொழிற்சங்கம் நாடளாவிய ரீதியில் வேலை நிறுத்த போராட்டத்தில் குதிக்கவுள்ளதாக அறிவித்துள்ளது.

அரசாங்கம் தங்களது சம்பள முரண்பாடுகளை சரி செய்ய தவறியதற்கு எதிர்ப்பு தெரிவித்து இம் மாதம் 26 ஆம், 27 ஆம் திகதிகளில் சுகவீன விடுமுறை போராட்டத்தை அறிவித்துள்ளது.

பிரதமர் மற்றும் கல்வி அமைச்சர் ஹரிணி அமரசூரியவுடனான சமீபத்திய சந்திப்பில் இரண்டு வாரங்களுக்குள் முன்னேற்றத்தை மதிப்பாய்வு செய்வதாக உறுதியளிக்கப்பட்டது.

இருப்பினும் அதைத் தொடர்ந்து எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாததால் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக ஒன்றிய செயலாளர் எஸ்.எம். பி. பண்டார தெரிவித்தார். (நி)


## ஆதன உரிமை மாற்ற அறிவித்தல்

**வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை : பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகம்**

**விண்ணப்பதாரரின் பெயர் : சூரியகுமார் பெண் ஜெகதீஸ்வரி**

**ஆதனப்பதிவேட்டின்படி பெயர் : சொந்தக்காரர்**

**ஆதன இல- 296 வீதி-மாதகல் அந்தோனியார் கோயில்வீதி வட்டாரம் -01**

வட்டாரம் **01 மாதகல் அந்தோனியார் கோயில் வீதி** ஆதன இலக்கம் **296** இல் அமைந்துள்ள ஆதனம் உறுதியின் பிரகாரம் வடமாகாணம் யாழ்ப்பாணம் வலிகாமம் தென் மேற்குப் பிரதேச செயலர் பிரிவு J/151 மாதகல் கிராம அலுவலர் பகுதி பண்டத்தரிப்பு கோவில்பற்று மாதகல் இறை **"வவுலன்"** எனும் பெயருள்ள நிலப்பரப்பு **06** விஸ்தீரணமுள்ள இவ் ஆதனம் தமக்கு உரித்தானது என பிரசித்த நொத்தாரிசு **ப.இராசகுரு** அவர்கள் முகதாவில் நிறைவேற்றப்பட்ட **9204** ஆம் இலக்க **2013.02.21** ஆம் திகதிய வெளிப்படுத்தல் உறுதி மூலம் இராசா கந்தசாமியும் பெண் பரமேஸ்வரியும் வெளிப்படுத்தியுள்ளனர்.

**ஆதன விபரம்**

கிழக்கு - பொதுவாக விடப்பட்ட ஆறு முழுப்பாதை
வடக்கு அருள்ராசா பெண் இராசேஸ்வரிக்குரிய ஆதனம்
மேற்கு -கணபதிப்பிள்ளை மாசிலாமணியின் உரிமைக்காரரின் ஆதனம்
தெற்கு -வீதி

மேற்குறித்த ஆதனம் **சூரியகுமார் பெண் ஜெகதீஸ்வரி என்பவருக்கு 4631 இல 22.06.2014 திகதிய உறுதி மூலம் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது.** நிலஅளவையாளர் நவரத்தினம் என்பவரால் 2016.06.12 ஆம் திகதி 1517 இலக்க நில அளவைப் படம் மூலம் ஆதனம் நிலப்பரப்பு 2 குழி 1.87 காணப்படுகின்றது. சூரியகுமார் பெண் ஜெகதீஸ்வரி என்பவர் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் பண்டத்தரிப்பு கிராம உபஅலுவலகத்தின் ஆதனப்பதிவேடுகளில் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார். மேற்படி ஆதன உரிமை மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ ஆட்சேபனையை தெரிவிக்குமாறும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் **சூரியகுமார் பெண் ஜெகதீஸ்வரி** என்பவரின் பெயருக்கு ஆதன உரிமை மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இந்த ஆதன உரிமை மாற்றம் செய்வதால் ஏற்படக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**செயலாளர்,**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.** (4621)



## ஆதன உரிமை மாற்ற அறிவித்தல்

**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை : பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகம்**

**விண்ணப்பதாரரின் பெயர் : மாசிலாமணி மரியயோசப் கஜேந்திரன்**

**ஆதனப்பதிவேட்டின் படி பெயர் :சொந்தக்காரர்**

ஆதன இல -425 வீதி- மாதகல் வீதி வட்டாரம் - 01

வட்டாரம் **01 மாதகல் வீதி** ஆதன இலக்கம் **425** இல் அமைந்துள்ள ஆதனம் உறுதியின் பிரகாரம் வடமாகாணம் யாழ்ப்பாணம் வலிகாமம் தென் மேற்குப் பிரதேச செயலர் பிரிவு J/152 மாதகல் கிராம அலுவலர் பகுதி பண்டத்தரிப்பு கோவில்பற்று மாதகல் இறை **"பள்ளடைப்பு"** எனும் பெயருள்ள நிலப்பரப்பு **02** குளி **12.72** விஸ்தீரணமுள்ள இவ் ஆதனம் தமக்கு உரித்தானது என பிரசித்த நொத்தாரிசு **இ.த.அன்ரன் பாலசிங்கம்** அவர்கள் முகதாவில் நிறைவேற்றப்பட்ட **7474** ஆம் இலக்க **2019.11.09** ஆம் திகதிய வெளிப்படுத்தல் உறுதி மூலம் மாசிலாமணி மரியயோசப் வெளிப்படுத்தியுள்ளார்.

**ஆதன விபரம்**

கிழக்கு - துண்டு 03 எனக் காட்டப்பட்டுள்ள எட்டரை அடி அகலமான பொதுப்பாதையும் துண்டு 01, துண்டு 02 ம்
வடக்கு - சகாயபிள்ளைக்கும் மறுபேருக்கும் உரிய ஆதனம்
மேற்கு - கனால் வீதி
தெற்கு -சின்னதுரையின் உரிமைக்காரரின் ஆதனம்

மேற்குறித்த ஆதனம் **மாசிலாமணி மரியயோசப் கஜேந்திரன் என்பவருக்கு 640 இல 15.01.2023 திகதிய உறுதி மூலம் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது.** நில அளவையாளர் **B.**பிரணவன் அவர்களால் 2024.08.03 ஆம் திகதிய 2316 ஆம் இலக்கத்தில் வரையப்பட்ட நிலப்பரப்பு 02 குளி 12.67 ஆக காணப்படுகின்றது. மாசிலாமணி மரியயோசப் கஜேந்திரன் என்பவர் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகத்தின் ஆதனப்பதிவேடுகளில் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார். மேற்படி ஆதன உரிமை மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ ஆட்சேபனையை தெரிவிக்குமாறும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் **மாசிலாமணி மரியயோசப் கஜேந்திரன்** என்பவரின் பெயருக்கு ஆதன உரிமை மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இந்த ஆதன உரிமை மாற்றம் செய்வதால் ஏற்படக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**செயலாளர்,**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,**
**மானிப்பாய்.** (4622)





## நயினாதீவு
# ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்
## 2025 விசுவாவசு வருட
# உயர் திருவிழா

**அம்பிகை அடியார்களே!**

**நிகழும் விசுவாவசு வருடம் ஆனி மாதம் 12 ஆம் நாள் 26.06.2025 வியாழக்கிழமை அம்பாளின் மஹோற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 11.07.2025 வெள்ளிக்கிழமை இரவு தெப்போற்சவத்துடன் நிறைவு பெறும்.இலங்கையில் கடல் சூழ்ந்த யாத்திரைத் தலமாகிய நயினாதீவில் அழகொழுக வீற்றிருந்து அருளாட்சி செய்யும் அன்னை ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் உயர் திருவிழாக் காலத்தில் அடியார்கள் ஆசார சீலர்களாக வருகை தந்து அம்பாளின் திரவருட் கடாட்சத்தினைப் பெற்றுய்யும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றோம்.**

| | | | |
|---|---|---|---|
| 26.06.2025 | வியாழக்கிழமை | 1 ஆம் திருவிழா | கொடியேற்றம் பகல் 12.00 மணி |
| 30.06.2025 | திங்கட்கிழமை | 5 ஆம் திருவிழா | பகல் - குடைத் திருவிழா,இரவு - முத்துச்சப்பரம் |
| 02.07.2025 | புதன்கிழமை | 7 ஆம் திருவிழா | இரவு - கைலைக்காட்சி |
| 05.07.2025 | சனிக்கிழமை | 10 ஆம் திருவிழா | பகல் - கைலைக் காட்சி, இரவு - திருமஞ்சம் |
| 06.07.2025 | ஞாயிற்றுக்கிழமை | 11 ஆம் திருவிழா | பகல் - விசேட கருட,சர்ப்ப பூசையுடன் வாயு பட்சணி நாகம் திருவீதி உலா, இரவு- பூந்தண்டிகை |
| 08.07.2025 | செவ்வாய்க்கிழமை | 13 ஆம் திருவிழா | பகல் - சிவபூசைக் கைலைக்காட்சி, இரவு- சப்பரம் |
| 09.07.2025 | புதன்கிழமை | 14 ஆம் திருவிழா | பகல் - இரதோற்சவம்,பிற்பகல் - பச்சை சாத்துதல், இரவு -அம்பாள் தேரடி தரிசனம் |
| 10.07.2025 | வியாழக்கிழமை | 15 ஆம் திருவிழா | பகல் - கங்காதரணியில் தீர்த்தோற்சவம், இரவு - திருவூஞ்சல், கொடியிறக்கம் |
| 11.07.2025 | வெள்ளிக்கிழமை | 16 ஆம் திருவிழா | தெப்போற்சவம்(பூங்காவனம்) |

**ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்,**
**நயினாதீவு.** (சி-3152)

**அன்னையின் அருள் பெற அடியார்கள் அனைவரும் வருக.**


**அறங்காவலர் சபை**
**ஸ்ரீநாகபூசணி அம்மன் கோயில்,**
**நயினாதீவு.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

## "வக்கிர மனங்களால் உக்கிரமாகுமோ யுத்தம்"

### கவிஞர் வைரமுத்துவின் வரிகள்



(சென்னை)

வல்லரசுகள் நல்லரசுகள் ஆகாவிடில் புல்லரசு ஆகிவிடும் பூமி என்று கவிஞர் வைரமுத்து தனது எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

ஈரான் மீது "ஒபரேஷன் ரைசிங் லயன்" என்ற பெயரில் கடந்த 13ஆம் திகதி இஸ்ரேல் தாக்குதல் நடத்தியது. அப்போது, ஈரானின் அணு ஆயுத பயன்பாட்டுக்கு எதிரான தாக்குதல் இது என இஸ்ரேல் தெரிவித்தது.

இதனை தொடர்ந்து ஈரானும் பதில் தாக்குதலில் ஈடுபட்டது.

இதற்கிடையில், ஈரானுக்கு எதிராக அமெரிக்காவும் போரில் இறங்கியது. ஈரானின் பர்தவ், நடான்ஸ் மற்றும் எஸ்பஹான் ஆகிய 3 அணு உலைகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. இதனால் போர் பதற்றம் மேலும் அதிகரித்திருக்கிறது.

இந்நிலையில் கவிஞர் வைரமுத்து குறித்த சம்பவம் தொடர்பில் தனது எக்ஸ் தளத்தில் கவிதை யொன்றை பதிவிட்டுள்ளார்.

குறித்த பதிவில்,

**"உலகின் தலையில்**
**மெல்லிய இழையில்**
**ஆடிக்கொண்டிருக்கிறது**
**அணுகுண்டு**
**வக்கிர மனங்களால்**
**உக்கிரமாகுமோ யுத்தம்**
**கலங்குகிறது உலகு...**
**ஈரானின் அணுசக்தித்**
**தளங்களில் டொமாஹக்**
**ஏவுகணைகள் வீசி**
**அவசரப்பட்டுவிட்டது**
**அமெரிக்கா**
**வல்லரசுகள் நல்லரசுகள் ஆகாவிடில் புல்**
**லரசு ஆகிவிடும் பூமி...**
**தான் கட்டமைத்த**
**நாகரிகத்தைத் தானே**
**அழிப்பதன்றி**
**இதுவரை போர்கள்**
**என்ன செய்தன?.**
**போரிடும் உலகத்தை**
**வேரோடு சாய்ப்போம்.**
**அணுகுண்டு முட்டையிடும் அலுமினியப்**
**பறவைகள்**
**அதனதன் கூடுகளுக்குத் திரும்பட்டும்"**

இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில் குறித்த கவிதையானது சமூக வலைதளங்களில் வைரலாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

# ஈரானுக்கு அணு...

# வழங்கத்...

## ரஷ்யா அதிரடி அறி...

**(மொஸ்கோ) ••••••••••• ஈரானின் அணுசக்தி மையங்கள்... அமெரிக்கா திடீர் தாக்குதலை மேற்கொ... நிலையில் ஈரானுக்கு பல நாடுகள் ... ஆயுதங்களை கொடுக்கத் தயாராக ... கின்றன என ரஷ்யா தெரிவித்துள்ளது.**

ரஷ்யாவின் முன்னாள் ஜனாதிபதியும், பாதுகாப்பு கவுன்சிலின் துணைத் தலைவருமான டிமிட்ரி மெட்வெடேவ்தான் இந்தத் தகவலை தனது எக்ஸ் பக்கத்தில் தெரிவித்திருக்கிறார்.

குறித்த பதிவில் "பல நாடுகள் ஈரானுக்கு நேரடியாக அணு ஆயுதங்களை வழங்கத் தயாராக உள்ளன. அணுசக்திப் பொருட்களை செறிவூட்டுகிறோம் என்று நாம் இப்போது வெளிப்படையாகச் சொல்ல முடியும். எதிர்காலத்தில் அணு ஆயுத உற்பத்தி தொடரும்" என்று தெரிவித்துள்ளார்.

ஈரான் அணு ஆயுதத்தை உற்பத்தி செய்கிறது என்பதுதான் அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் குற்றச்சாட்டு. ஆனால், இதற்கான உறுதியான ஆதாரங்கள் இதுவரை கிடைக்கவில்லை.

இப்படி இருக்கையில் தான் கடந்த 13ஆம் திகதி ஈரானின் அணுசக்தி மையங்கள் மீது இஸ்ரேல் தாக்குதலை நடத்தியது. இந்த தாக்குதலில் பெரிய சேதங்கள் ஏற்படவில்லை.

இருப்பினும், ஈரான் கடுமையான பதிலடியை கொடுத்தது.

இஸ்ரேலின் வான் பாதுகாப்பு அம்சங்களை தாண்டி, சென்று தாக்கும் அளவுக்கு சக்திவாய்ந்த ஏவுகணைகளை ஈரான் பயன்படுத்தியிருந்தது. பதிலுக்கு இஸ்ரேலும் தாக்...

இந்தப் போர்ப் பதற்றம் மத்திய கிழக்கு அரசியலில் ...

குதல... நாடுக... யேய... மூண...

இர... யில் ஈ... தாக்கு... தத் த... எனும்... GBU... மூன்... ளின்...

இத... றிலும... கூறிய... புதிய... ளது.



## அமெரிக்க தாக்குதல் எதிரொலி ரஷ்யா பறக்கிறார் ஈரான் அமைச்சர்

(டெஹ்ரான்)

ஈரானின் அணு நிலையங்கள் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தியதை அடுத்து ரஷ்ய ஜனாதிபதியுடன் முக்கிய பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதற்காக ஈரான் வெளியுறவு அமைச்சர் ரஷ்யா செல்லவுள்ளதாக தெரிவித்துள்ளார்.

அமெரிக்க இராணுவம் ஈரானின் ஃபோர்டோ, இஸ்ஃபஹான், நடான்ஸ் ஆகிய அணுசக்தித் தளங்கள் மீது தாக்குதல் நடத்தியது சர்வதேச சட்டத்தை மீறிய செயல் என ஈரான் அணுசக்தி கழகம் கண்டனம் தெரிவித்துள்ளது.

இதனையடுத்து பதிலடியாக இஸ்ரேல் மீது சரமாரியான ஏவுகணை தாக்குதலை ஈரான் நடத்தியது இந்த தாக்குதலில் 86 பேர் காயமடைந்துள்ளதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் ஈரான் வெளியுறவுத்துறை அமைச்சர் செய்யத் அப்பாஸ் அரக்சி, அவசர அவசரமாக ரஷ்யா செல்லவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இஸ்தான்புல்லில் செய்தியாளர்களை சந்தித்த அவர், "ரஷ்ய ஜனாதிபதி புடினை சந்தித்து ஆலோசனை நடத்தவுள்ளேன்.

ரஷ்யாவுடன் இணைந்து செயற்படுவோம்" என்று தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# ணு ஆயுதங்கள்

# த் தயார்!

## அறிவிப்பு



கள் மீது
ற்கொண்ட
ள் அணு
க இருக்
து.

குதலை நடத்த, இரு நாடுகளுக்கு இடையேயும் போர் மூண்டது.

இந்த நிலையில் ஈரான் மீது தாக்குதல் நடத்தத் திட்டமிட்டிருந்த ட்ரம்ப் B-2 எனும் சிறப்பு விமானங்கள் மூலம் GBU-57 ரக குண்டை ஈரானின் மூன்று அணு ஆய்வு மையங்களின் மீது வீசியிருக்கிறது.


இதில் ஆய்வு மையங்கள் முற்றிலுமாக அழிந்து போனதாக ட்ரம்ப் கூறியிருக்கிறார்.

ஆனால் சேதம் மிக குறைவான அளவில் மட்டுமே இருந்ததாக ஈரான் மறுத்துள்ளது.

இந் நிலையில் தான் ஈரானுக்கு அணு ஆயுதங்களை கொடுக்க பல நாடுகள் முன்வந்திருக்கின்றன என ரஷ்யா கூறியிருக்கிறது.

உலகில் அதிக அளவில் அணு ஆயுதங்களை கொண்டிருப்பது ரஷ்யாதான் என்பது குறிப்பிடத்தக்கது. (நி)


புதிய திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. (நி)



# அமைதிப் பணிகளால்

## எதிர்காலத்தை வடிவமைப்போம்

### போப் லியோவின் எக்ஸ் தள பதிவு



(வத்திக்கான்)

நாடுகள் தங்கள் எதிர்காலத்தை வன்முறை மற்றும் இரத்தக்கறை படிந்த மோதல்களால் அல்ல, அமைதிப் பணிகளால் வடிவமைக்கட்டும் என போப் லியோ தனது எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

அவரது பதிவில், "போர் பிரச்சினைகளைத் தீர்க்காது. மாறாக, அது அவற்றைப் பெருக்கி, மக்களின் வரலாற்றில் ஆழமான காயங்களை ஏற்படுத்துகிறது. அவை குணமடைய தலைமுறைகள் ஆகும்.

எந்த ஆயுத வெற்றியும் தாய்மார்களின் வலியையோ, குழந்தைகளின் பயத்தையோ அல்லது பறிக்கப்பட்ட அவர்களின் எதிர்காலத்தையோ ஈடு செய்ய முடியாது. பேச்சு வார்த்தைகள் மூலம் தாக்குதல்கள் நிறுத்தப்பட வேண்டும்.

இன்று, மனிதகுலம் எப்போதும் இல்லாத அளவுக்கு அமைதிக்காகக் குரல் கொடுத்துக் கொண்டிருக்கிறது.

இது பொறுப்பும் பகுத்தறிவும் தேவைப்படும் ஒரு கூக்குரல். மேலும் இது ஆயுதங்களின் இரைச்சலால் அல்லது மோதலைத் தூண்டும் வார்த்தைகளால் மூழ்கடிக்கப்படக் கூடாது.

மத்திய கிழக்கிலிருந்து, குறிப்பாக ஈரானிலிருந்து, தொடர்ந்து அச்சமூட்டும் செய்திகள் வெளிவருகின்றன.

இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனம் உள்ளிட்ட இந்த துயரமான பின்னணியில், குறிப்பாக காசா மற்றும் பிற பிரதேசங்களில், போதுமான மனிதாபிமான உதவிக்கான தேவை அதிகரித்து வரும் அவசரநிலையில், மக்களின் அன்றாட துன்பங்கள் மறக்கப்படும் அபாயம் உள்ளது" என்று அவர் பதிவிட்டுள்ளார். (நி)

# சிரிய தேவாலயத்தில் தற்கொலைத் தாக்குதல்

## 22 பேர் உயிரிழப்பு, 63 பேர் காயம்!

(டமாஸ்கஸ்)

சிரியாவின் டமாஸ்கஸில் உள்ள ஒரு தேவாலயத்தில் நடந்த தற்கொலை குண்டு வெடிப்பில் சுமார் 22 பேர் உயிரிழந்தனர்.

மேலும், இந்தத் தாக்குதலில் 63 பேர் காயமடைந்துள்ளதாக அந்நாட்டு சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை மாலையில் ட்வீலா பகுதியில் உள்ள எலியாஸ் நபியின் கிரேக்க ஆர்த்தடாக்ஸ் தேவாலயத்தில் ஒரு நபர் ஆயுதத்தால் துப்பாக்கிச் சூடு நடத்தி பின்னர் வெடிகுண்டு உடையை வெடிக்கச் செய்ததாகவும் உள்துறை அமைச்சகம் குறிப்பிட்டுள்ளது.

தாக்குதல் நடத்தியவர் ஜிஹாதி குழுவான இஸ்லாமிய அரசு (IS) உடன் தொடர்புடையவர் எனவும் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

அந்தக் குழுவிடமிருந்து உடனடியாக எந்த உரிமை கோரலும் இல்லை.

சிரியாவில் கிறிஸ்தவர்கள் மற்றும் பிற மத சிறுபான்மையினரை ஐஎஸ் அடிக்கடி குறிவைத்து வருகிறது.


2016 ஆம் ஆண்டில், டமாஸ்கஸின் தெற்கு புறநகர்ப் பகுதியில் உள்ள ஷியா முஸ்லிம் சயீதா ஜெய்னாப் ஆலயத்திற்கு அருகில் நடந்த தொடர் குண்டுவெடிப்புகளுக்கு இந்தக் குழு பொறுப்பேற்றது.

இதில் 70இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்பார்த்த விளைச்சல் இம்முறை இல்லை

## விவசாயிகள் கவலை



(கொழும்பு)

பெரும்போக நெற்செய்கையின் போது எதிர்பார்த்தளவு விளைச்சல் கிடைக்காமையினால் எதிர்வரும் காலங்களில் அரிசியை இறக்குமதி செய்வதற்கான நிலை ஏற்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கண்டியில் நடைபெற்ற நிகழ்ச்சியொன்றில் கருத்துரைத்த பேராதனை பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட பேராசிரியர் புத்தி மரம்பே தெரிவித்துள்ளார்.

இதன்படி, 350,000 மெற்றிக் தொன் அரிசியை இறக்குமதி செய்ய வேண்டிய நிலை ஏற்படும் என குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில், இந்த விடயம் தொடர்பில் விவசாயம் மற்றும் கால்நடைகள் பிரதியமைச்சர் நாமல் கருணாரத்ன தெரிவிக்கையில் இதுவரை அரிசியை இறக்குமதி செய்ய வேண்டிய அவசியம் ஏற்படவில்லை என தெரிவித்தார்.

பேராசிரியரின் கூற்று கணிப்பு மாத்திரமே என்றும் அடுத்த சில வாரங்களில் சிறுபோக அறுவடை ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதனிடையே, நாட்டின் சில பகுதிகளில் சிறுபோகத்துக்காக பயிரிடப்பட்ட நெல் செழிப்பாக வளர்ச்சியடையவில்லை என விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

சிறுபோக நெற்செய்கைக்காக அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட உரத்தின் தரத்தில் ஏற்பட்ட மாற்றமே இதற்கு காரணம் என விவசாயிகள் குற்றஞ்சுமத்தியுள்ளனர். (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1991- இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
2இல் செவ்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: BA,DO
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15702

பிறப்பு:1985-இந்து
நட்சத்திரம்:சுவாதி
கி-பா-24
உயரம்:5'8"
தகைமை/தொழில்-Nurse(Gov)
எதிர்பார்ப்பு: அரசஉத்தியோகம்
தொ.இ: B/15705

பிறப்பு:1988-இந்து
நட்சத்திரம்:மிருகசீரிடம்
கி-பா-42
உயரம்:5'5"
தகைமை/தொழில்: Business(own)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15706

பிறப்பு: 1989- இந்து
நட்சத்திரம்: ரேவதி
உயரம்:5'6"
தகைமை/தொழில்-Marine Engineer
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15707

பிறப்பு: 1997- இந்து
நட்சத்திரம்:மூலம்
கி-பா- 19 1/2
12இல் செவ்
உயரம்:5'8"
தகைமை/தொழில்: BSc, MSc, Civil Engineer
எதிர்பார்ப்பு: அரசஉத்தியோகம்
தொ.இ: B/15709

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு-1999-இந்து
நட்சத்திரம்: உத்தரம்
1இல்செவ்
கி-பா-65
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: Diploma, Accountant (pvt)
எதிர்பார்ப்பு: Doctor, Engineer
தொ.இ: G/15701

பிறப்பு-1997-இந்து
நட்சத்திரம்-சித்திரை
கி-பா-44
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: MBBS, Doctor
எதிர்பார்ப்பு: Doctor, Engineer
தொ.இ: G/15703

பிறப்பு-1998-இந்து
நட்சத்திரம்-திருவோணம்
கி.பா -20
7இல்செவ்
உயரம்-5'6"
தகைமை/தொழில்: MBBS, Doctor
எதிர்பார்ப்பு: Doctor
தொ.இ: G/15704

பிறப்பு-1999-இந்து
நட்சத்திரம்:சுவாதி
8இல்செவ்
கி.பா-20
உயரம்: 5'4"
தகைமை/தொழில் - BA, Teacher
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்
தொ.இ: G/15708

பிறப்பு-1994-இந்து
நட்சத்திரம்: கேட்டை
8இல் செவ்
உயரம்: 5"
தகைமை/தொழில் -A/L,Teacher
எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்.
தொ.இ: G/15715

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இன்று ஒரு தகவல் 402



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## கல்லறை நோக்கி...

ஒருவருடைய உண்மையான குணம் அவர் இந்த உலகத்தைவிட்டுப் போகிற சமயத்திலேதான் முழுதாக வெளியிலே தெரியும்.

பெரியவர் ஒருவர் (ஓஷோ - ரஜினீஷ்) ஒரு கதை சொல்லியிருக்கிறார். ஒரு பெரிய மனிதன். மிகவும் வசதியான நபர் இருந்தாலும் அந்த வசதியை அனுபவிக்கத் தெரியாதவன்.

அவன் கடைசியிலே சாகக்கிடக்கிறான்.

படுக்கையைச் சுற்றி சொந்த பந்தமெல்லாம் உட்கார்ந்திருக்கிறார்கள். பிள்ளைகள் எல்லாம் அப்பா இறந்து போன பிறகு அவரை எப்படி கல்லறைக்குக் கொண்டு போவது என்று பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

மூத்த பிள்ளை சொல்கிறான். அப்பா இறந்ததற்கு பிறகு அவரை கல்லறைக்குக் கொண்டு போக வேண்டும். அதற்கு வாடகைக்கார் ஒன்று எடுக்கலாம் என்றான்.

அடுத்த பிள்ளை சொல்கிறான். "அவர் எப்போதும் ஒரு விலை உயர்ந்த காரிலே போக வேண்டும் என்று ஆசைப்பட்டுக் கொண்டிருந்தார். ஆனால் வாழ்க்கையிலே ஒருநாள் கூட அவர் அதிலே உட்கார முடியவில்லை. கடைசியிலே கல்லறைக்குப் போகிற சமயத்திலேயாவது அவர் அதிலே போய்ப் பார்க்கட்டும்! என்றான். இதைக் கேட்டதும் பெரியவன்.

"விபரம் தெரியாமல் பேசாதே. நீ சின்னவன் உனக்கு ஒரு விடயமும் புரியவில்லை. இறந்து போனவர்கள் எதையும் அனுபவிக்க முடியாது. இறந்தவர்களுக்கு எந்தக் காராக இருந்தால் என்ன? அது அதிகமா, குறைவா என்று அவர்களுக்கு எங்கே தெரியப்போகிறது? அதனாலே விலை உயர்ந்த கார் வேண்டாம். சாதாரண காரே போதும்! என்றான். இதைக் கேட்டதும் இன்னொரு பிள்ளை சொன்னான்.

நீங்கள் இரண்டு பேரும் பேசுவது கொஞ்சம் கூட அர்த்தம் இல்லாத விடயம். கல்லறைக்கு உடம்பை எடுத்துக்கொண்டு போவதற்குக் கார் எதற்கு? நீங்க போடும் திட்டம் ஊதாரித்தனம்!

இறந்த உடலை ஏதோ ஒரு வழியிலே கல்லறைக்கு எடுத்துக்கொண்டுப் போக வேண்டும். அவ்வளவுதானே!

எனக்கு வேண்டியவன் ஒருத்தன் இருக்கான். அவனிடம் வாகனம் ஒன்று இருக்கு! இதற்காகவே அவன் அந்த வாகனத்தை வைத்திருக்கிறான். அவனைக் கூட்டிக் கொண்டு வருகிறேன். அது இன்னும் வசதியாகவும் இருக்கும். சிக்கனமாகவும் இருக்கும். என்றான். இதைக்கேட்டதும் இன்னொரு மகன் சொன்னான்.

"காரும் வாகனமும் எதற்கு? அவர் என்ன கல்யாணமா செய்யப் போகிறார்? அவர் இறக்க போகிறார்! அவ்வளவு தான்! இறந்தவுடன் அவரை மெதுவாக தூக்கிக்கொண்டு போய் நம் வீட்டுக்கு வெளியே உள்ள குப்பைத் தொட்டியிலே போட்டுவிடலாம். மாநகரசபை வாகனம் அவரை தானாகவே தூக்கிக் கொண்டு போய்விடும். நமக்கு செலவே இல்லை! என்றான். இந்த நேரத்திலே இறக்க கிடந்த அந்தப் பெரிய மனிதன் மெதுவாக கண்ணைத் திறந்து "எங்கே என் செருப்பு?" என்றார். பிள்ளைகள் எல்லாம். "எதற்கு அப்பா இப்போது செருப்பு?" என்று கேட்டார்கள். "என் செருப்பு இப்போது எனக்கு வேண்டும்!" என்றான். அவன்.

"அப்பா எப்போதுமே பிடிவாதக்காரர். அவர் தன்னுடைய செருப்போடு இறந்து போக ஆசைப்பட்டார் போல இருக்கு! அவர் செருப்பை அவரே வைத்துக் கொள்ளட்டும்!" என்றான் மூத்த பையன். செருப்பை எடுத்துக் கொடுத்தார்கள். அந்த மனிதன் அதை வாங்கி காலிலே மாட்டிக்கொண்டு தட்டுத் தடுமாறி எழுந்து நின்றார்.

பிள்ளைகளைப் பார்த்து சொன்னார். பிள்ளைகளே நான் இன்னும் கொஞ்ச நேரம் உயிரோடு இருப்பேன். அதற்குள்ளே கல்லறைக்கு கால்நடையாக நடந்தே போய் விடுகிறேன். உங்களை அங்கே சந்திக்கிறேன். நீங்க ஊதாரித்தனமாக செலவு செய்ய திட்டம் போடுகிறீர்கள். நான் காரிலே போகவேண்டும் என்று கனவு தான் கண்டேன். ஏன் என்றால் கனவு செலவில்லாதது. அதனாலே கண்டேன் என்று சொல்லிவிட்டு அவர் பாட்டிற்கு நடந்துபோய் கல்லறையிலே உட்கார்ந்து கொண்டார்.

ஒருத்தன் எப்படிப்பட்டவன் என்பது இறக்கும் நேரத்திலே தான் தெரியும் என்பதை விளக்குவதற்காக சொல்லப்பட்ட கதை இது.

இந்தக்காலத்து ஆசாமி ஒருவர் இறக்கக்கிடந்தான். சுத்திவர சொந்த பந்தமெல்லாம் உட்கார்ந்திருக்கிறது. கடைசியாக டாக்டர் வந்து கையைப்பிடித்துப் பார்க்கிறார். "அவர் இறந்து விட்டார்" என்கிறார். அவரை பாடையிலே வைத்து தூக்கிக் கொண்டு போகிறார்கள். பாதிவழியிலே பாடையிலே இருந்தவன் எழுந்து உட்கார்ந்து கொண்டு "நான் இன்னும் சாகவில்லை. உயிர் இருக்கு" என்று மெதுவாக சொல்கிறான். தூக்கிக்கொண்டு போன நான்கு பேரிலே ஒருவன் அவனைப் பார்த்து நீ இறந்து போய் விட்டதாக வைத்தியரே சொல்லிவிட்டார். அவரை விட நீ என்ன விடயம் தெரிந்தவனா? பேசாமல் படு "என்று சொல்லிவிட்டு எல்லோரும் இன்னும் அவசரமாக நடக்க ஆரம்பித்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுபோக நெற்செய்கையில் பன்றி நெல் தாக்கம்

## விவசாயிகள் கவலை

(தருமபுரம்)

**சிறுபோக நெற்செய்கையில் பன்றி நெல் தாக்கம் ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.**



கிளிநொச்சி மாவட்ட இரணைமடு கீழ்பகுதியான புளியம்பொக்கனை கமநல சேவை பிரிவுக்குட்பட்ட விவசாயிகளின் சிறுபோக செய்கையில்களை நெல் (பன்றி நெல்)தாக்கம் ஏற்பட்டுள்ளது. இதனை யடுத்து குறித்த பகுதிக்கு நேற்று கள விஜயம் ஒன்றினை பிரதி விவசாய பணிப்பாளர் நெல் ஆராய்ச்சி நிலையம் பரந்தன், பத்தல கொட R M N H சேனாநாயக்க மற்றும் உதவி விவசாயப் பணிப் பாளர் , V சோதிலட்சுமி ஆகியோர் புளியம் பொக்கனை வயல் நிலங்களை பார்வையிட்டனர்.அதனைத் தொடர்ந்து களை நெல்லை (பன்றி நெல்) கட்டுப்படுத்துவதற்கு பல விழிப் புணர்வுகளும் வழங்கப்பட்டது. இதனை கட்டுப்படுத்துவதற்கு சட் டிக்கலப்பை, மட்டக்கலப்பை என்பன பயன்படுத்துவதன் மூலம் பன்றி நெல்லினைக் கட்டுப்படுத்த முடியும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (8-316)

## ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி உறுப்பினர்கள் சத்தியப்பிரமாணம்

(பனிக்கன்குளம்)

ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் சார்பாக கடந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலில் போட்டியிட்டு முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் , மாந்தை கிழக்கு ,புதுக்குடியிருப்பு, கரைதுறைபற்று ஆகிய நான்கு பிரதேச சபைகளுக்கும் தெரிவான உறுப்பினர்களின் சத்தியப்பிரமான நிகழ்வு கடந்த 22 ஆம் திகதி முள்ளியவளை பகுதியில் இடம்பெற்றது.

அந்தவகையில் கடந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலில் முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேச சபைக்கு தெரிவு செய்யப்பட்ட இரண்டு உறுப்பினர்களும் மாந்தை கிழக்கு பிரதேச சபைக்கு தெரிவு செய்யப்பட்ட இரண்டு உறுப்பினர்களும் கரைதுறைபற்று பிரதேச சபைக்கு தெரிவு செய்யப்பட்ட நான்கு உறுப்பினர்களும் புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்கு தெரிவு செய்யப்பட்ட இரண்டு உறுப்பினர்களுமாக மொத்தமாக பத்து உறுப்பினர்கள் குறித்த சத்திய பிரமாண நிகழ்வில் கலந்து கொண்டனர். குறிப்பாக கரைதுறைபற்று பிரதேச சபைக்காக சுயேட்சை குழுவாக போட்டியிட்டு வெற்றியீட்டிய உறுப்பினர் ஒருவரும் சத்திய பிரமாணம் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (8-281)

## தென்னை முக்கோண வலய செயற்றிட்டம் ஆரம்பம்

(தருமபுரம்)

ஜனாதிபதியின் எண்ணக் கருவுக்கு அமைய வடக்கு தென்னை முக்கோண வலயத்திற்கான நடவடிக்கைகளின் ஆரம்பமாக டிசம்பருக்குள் 6 இலட்சத்து . 50 ஆயிரம் தென்னைகளை இலவசமாக வழங்க ஏற்பாடு செய்துள்ளதாக தென்னை பயிர்ச்செய்கை சபையின் கிளிநொச்சி, யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவு பிராந்திய முகாமையாளர் ஈஸ்வரன் சற்குணன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே குறித்த விடயத்தை தெளிவுபடுத்தினார். தொடர்ந்து தெரிவிக்கையில்,

2030ஆம் ஆண்டு மொத்த உற்பத்தியில் 4200மில்லியன் தேங்காயை உற்பத்தி செய்யும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த வருட டிசம்பர் மாதத்திற்குள் 6 இலட்சத்து 50 ஆயிரம் தென்னங் கன்றுகள் இலவசமாக வழங்கும் திட்டத்தில் 72000 தென்னங்கன்றுகள் இதுவரை வழங்கப்பட்டுள்ளன. இரண்டு நடுகைத்திட்டம் மூலம் தென்னங்கன்றுகள் இலவசமாக வழங்கப்படுகின்றது- என்றார். (8-316-104)

## மன்னார் நடுக்குடா கடற்கரையில் ஒரு தொகுதி பீடி இலைகள் மீட்பு

(மன்னார்)

மன்னார் தலைமன்னார் பிரதான வீதி, நடுக்குடா கடற்கரை பகுதியில் வைத்து ஒரு தொகுதி பீடி இலை மூடைகள் மற்றும் ஒரு தொகுதி பீடி கட்டுகள் நேற்று திங்கட்கிழமை காலை மீட்கப்பட்டுள்ளன.



சட்ட விரோதமான முறையில் இந்தியாவில் இருந்து படகு மூலம் கடத்தி வரப்பட்டு நடுக்குடா காட்டுப் பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 45 மூடைகளில் பொதி செய்யப்பட்ட 1360 கிலோ பீடி இலைகள் மற்றும் 29 ஆயிரத்து 120 பீடிகள் இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன.

கடற்படைக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் குறித்த பொருட்கள் மீட்கப்பட்ட நிலையில் கடற்படையினர் மன்னார் மதுவரி நிலைய அதிகாரிகளிடம் ஒப்படைத்துள்ளனர். சந்தேக நபர்கள் எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை.

மேலதிக விசாரணைகளை மன்னார் மதுவரி நிலைய அதிகாரிகள் முன்னெடுத்து வருகின்றனர். (8-285)

## மின், இலத்திரனியல் கழிவு

### சேகரிப்பு வாரம் கிளிநொச்சியில் ஆரம்பம்



(தருமபுரம்)

மின் மற்றும் இலத்திரனியல் கழிவு சேகரிப்பு வாரம் நேற்று கிளிநொச்சியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தில் அமைந்துள்ள மத்திய சுற்றாடல் அதிகார சபையின் வடமாகாண அலுவலகத்தின் ஏற்பாட்டில், கரைச்சி பிரதேச சபையில் நேற்று காலை குறித்த நிகழ்வு நடைபெற்றது.

நிகழ்வை கிளிநொச்சி மாவட்ட பதில் அரச அதிபர் எஸ்.முரளிதரன் கலந்து கொண்டு ஆரம்பித்து வைத்தார்.

"சுற்றாடல் எம்மைக் காக்கும் நாம் சுற்றாடலைக் காப்போம்" எனும் தொனிப் பொருளில், 23 ஆம் திகதி தொடக்கம் 27ஆம் திகதி வரை மின் மற்றும் இலத்திரனியல் கழிவு வாரமாக பிரகடனப் படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8-316)

## பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்

(யாழ்ப்பாணம்)

சமூகப் பொருளாதார சிக்கல் காரணமாக பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு கல்வி சார் உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சித் திட்டம் வேலணை பிரதேச செயலா ளர் கே. சிவகரன் தலைமையில் கடந்த 22 ஆம் திகதி வேலணைப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடை பெற்றது. இந்நிகழ்வில் மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு மாணவர்களுக் கான பாடசாலை உபகரணங்களை வழங்கி வைத்தார்.அதனைத் தொடர்ந்து ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்திலும் கல்வி சார் உபகரணங்கள் மாணவர் களுக்கு வழங்கப்பட்டது.

மேலும், காரைநகர், மருதங்கேணி மற்றும் நெடுந்தீவு ஆகிய ஒவ்வொரு பிரதேச செயலகங்களிலிருந்தும் தெரிவு செய்யப் பட்ட 20 மாணவர் களுக்கு இவ் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டவுள்ளன. (8-33)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 805





“ஆம், ஆம்! அறிந்திருக்கிறேன் ஆதித்த கரிகாலர் வீராதி வீரர் என்றும் உலகமெல்லாம் அவர் புகழ் பரவியிருக்கிறதென்றும் அறிந்திருக்கிறேன். அக்கா! வீர பாண்டியனுடைய தலையை ஆதித்த கரிகாலர் ஒரே வெட்டில் வெட்டி விட்டாராமே? அது உண்மையா?”

நந்தினியின் முகம் அச்சமயம் எவ்வளவு பயங்கரமாக மாறியது என்பதை மணிமேகலை கவனிக்கவில்லை. நந்தினி சில வினாடி நேரம் வேறு பக்கம் பார்த்துக் கொண்டிருந்து விட்டுத் திரும்பினாள். அதற்குள் அவள் முகம் பழையபடி பார்ப்போரை மயக்கும் மோகன வசீகரத்துடன் விளங்கியது.

“மணிமேகலை! ஒருவருடைய தலையை ஒரே வெட்டில் வெட்டிவிடுவது பெரிய வீரம் என்று கருதுகிறாயா? அது பயங்கர அசுரத்தனம் அல்லவா?” என்றாள்.

“நீங்கள் சொல்லுவது எனக்கு விளங்கவில்லை அக்கா! பகைவனின் தலையை வெட்டுவது வீரம் இல்லையா? அது எப்படி அசுரத்தனமாகும்!”

“இந்த மாதிரி யோசனை செய்து பார்! உனக்கு ரொம்ப வேண்டியவன் ஒருவனை அவனுடைய பகைவன் தலையை வெட்ட வருகிறான் என்று வைத்துக்கொள். உன் தமையனை எண்ணிக் கொள் அல்லது நீ மணம் செய்து கொள்ள உத்தேசித்திருக்கும் காதலன் ஒருவன் இருப்பதாக நினைத்துக் கொள். அவன் காயம் பட்டு படுத்த படுக்கையாகக் கிடக்கும் போது இன்னொருவன் அவனுடைய பகைவன் கத்தியை ஓங்கிக் கொண்டு தலையை வெட்ட வருகிறான் என்று எண்ணிக்கொள். அப்படி வெட்ட வருகிறவனுடைய வீரத்தை நீ மெச்சிப் பாராட்டுவாயா?” என்று கேட்டாள் பழுவூர் ராணி.

மணிமேகலை சற்று யோசித்து விட்டு, “அக்கா! மிக விசித்திரமான கேள்வி நீங்கள் கேட்கிறீர்கள். ஆயினும் எனக்குத் தோன்றும் மறுமொழியைச் சொல்லுகிறேன். அத்தகைய நிலைமை எனக்கு ஏற்பட்டால், நான் சும்மா பார்த்துக் கொண்டிருக்க மாட்டேன். கொல்ல வருகிறவனுடைய கையிலிருந்து கத்தியைப் பிடுங்கி அவனை நான் குத்திக் கொன்று விடுவேன்!” என்றாள்.

நந்தினி மணிமேகலையை ஆர்வத்துடன் கட்டித் தழுவிக் கொண்டாள். “என் கண்ணே! நல்ல மறுமொழி சொன்னாய்! இவ்வளவு புத்திசாலியாகிய உனக்கு நல்ல கணவன் வாய்க்க வேண்டும் என்று கவலையாயிருக்கிறது. ஆதித்த கரிகாலர் கூட உனக்குத் தக்க மணவாளர் ஆவாரா என்பது சந்தேகந்தான்” என்றாள் நந்தினி.

“நானும் அப்படித்தான் எண்ணுகிறேன் கரிகாலருடைய குணாதிசயங்களைப் பற்றிக் கேட்ட பிறகு அவரை நினைத்தால் எனக்குச் சற்று பயமாகவே இருக்கிறது. என்னுடைய அந்தரங்கத்தை, என் மனத்திலுள்ளதை உள்ளபடி சொல்லட்டுமா அக்கா?” என்று கேட்டாள் மணிமேகலை.

**14 ஆம் அத்தியாயம்**
**கனவு பலிக்குமா?**

நந்தினி மணிமேகலையின் முகவாயைச் சற்று நிமிர்த்திப் பிடித்துக் கொண்டு அவளுடைய மலர்ந்த கண்களை ஊடுருவி நோக்கினாள்.

“என் கண்மணி! உன் அந்தரங்கத்தை நீ என்னிடம் சொல்லாமல் வைத்துக் கொள்வதே நல்லது. பார்க்கப்போனால் உனக்கு நான் பழக்கமாகி முழுமையாக ஒரு நாள் கூட ஆகவில்லை. நெடுநாள் பழகிய தோழிகளிடம் தான் அந்தரங்கத்தைச் சொல்ல வேண்டும்” என்றாள்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## அதிர்ஷ்டம் எப்படியும் வரும்



(நேற்றைய தொடர்ச்சி)

முனியா நன்றாக பார், உன் பசு மாடு ரொம்ப மெலிந்து போய் இருக்கிறது. பார், கால் கூட மெலிந்து போன மாதிரி இருக்கிறது. இதை கூட்டிக்கொண்டு சந்தைக்குப் போனால் ஒருவனும் வாங்க மாட்டான்.

முனியனுக்கு கவலையாகி விட்டது. ஐயோ என் மனைவி இதை விற்றுத் தானே அந்த தோட்டத்தை வாங்கிறதாக சொன்னாள். கவலையுடன் சொன்னான். நீ ஒன்றும் கவலைப்படாதே முனியா, இந்தா இந்த ஆட்டை ஓட்டிக் கொண்டு போ, மாட்டை என்னிடம் கொடுத்துவிடு. இந்த ஆடு நல்ல விலைக்கு போகும், கொண்டு போய் சந்தையில் விற்று உன் மனைவியிடம் கொடு.

இந்த ஆடு நல்ல விலை போகுமா? கவலையுடன் கேட்ட முனியனிடம், நல்ல விலை போகும். தைரியமா வாங்கிக்கொள்.

முனியனும் அவன் சொன்னதை நம்பி தன்னுடைய பசு மாட்டை கொடுத்து விட்டு அவனுடைய ஆட்டை வாங்கிக்கொண்டு நடக்க ஆரம்பித்தான். மாட்டை வாங்கியவன் மகிழ்ச்சியுடன் இவனை ஏமாற்றி விட்ட சந்தோசத்தில் வேக வேகமாக அங்கிருந்து கிளம்பினான்.

ஒரு மைல் தூரம் முனியனும் அந்த ஆட்டுடன் நடந்திருப்பான். அப்பொழுது எதிரில் ஒருவன் ஒரு சேவலுடன் நடந்து வந்து கொண்டிருந்தான். அவனுக்கு முனியனை பற்றி தெரியும், முனியனை ஏமாற்றி விடலாம் என்று முடிவு செய்தான். அட என்ன முனியா இவ்வளவு வயதான ஆட்டைப் பிடித்துக் கொண்டு எங்கே போகின்றாய். வயதான ஆடா, நல்ல இளம் ஆடு என்று தான் என யோசனையுடன் முனியன் நின்றான். நன்றாய் பாருங்கள், அது இளம் ஆடு தான், சந்தைக்கு கொண்டு போய்க் கொண்டு இருக்கின்றேன். என் மனைவி இதை விற்றுத்தான் ஒரு தோட்டம் வாங்க போறாள்.

இவனின் பேச்சால் குழம்பி போனான் முனியன். இது வயதான ஆடா, இது தெரியாமல் வாங்கிட்டமே, இப்போது என்ன செய்வது, பேசாமல் இவரிடமே இந்த சேவலை வாங்கி சந்தைக்கு போய் விற்று நிறையப் பணம் வாங்கிக் கொள்ளலாம் என முடிவு செய்தவன், சரி இந்தாங்க ஆட்டை பிடியுங்கள் என்று ஆட்டை கொடுத்து விட்டு சேவலை பெற்றுக்கொண்டு நடக்க ஆரம்பித்தான்.

இன்றைக்கு இளிச்சவாயன் மாட்டிக் கொண்டான் என்று நினைத்துக் கொண்டு அந்த ஆட்டை ஓட்டி சென்றான் அந்த ஏமாற்றுக்காரன்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனக்காக வாழ்கிறேன் என்று பிறர் சொல்வதை விட உன்னால் வாழ்கிறேன் என்று ஒருவரைச் சொல்ல வை. – அன்னை தெரேசா

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தேவையாயின் கியூஆர் கோட் முறையை அமுலாக்குங்கள்

ஈரான் – இஸ்ரேல் யுத்தம் மென்மேலும் வலுவடைந்து வருகிறது.

போரைத் தீவிரப்படுத்துவதுபோல ஈரானின் அணுவாயுத உலைகள் மீது அமெரிக்க விமானம் தாக்குதலை நடத்தியுள்ளது.

அதேநேரம் மசகு எண்ணெய் விநியோகப் பாதையை தடுக்கின்ற தீர்மானத்தை ஈரானியப் பாராளுமன்றம் நிறைவேற்றுமாக இருந்தால், நிலைமை இன்னும் மோசமாகும்.

அதேநேரம் அமெரிக்காவின் தாக்குதலையடுத்து ஈரானுக்குத் தேவையான உதவிகளை வழங்கத் தயார் என ரஷ்யா அறிவித்துள்ளது.

கூடவே அமெரிக்காவின் தாக்குதலுக்கும் ரஷ்யா தனது கண்டனத்தை வெளிப்படுத்தியுள்ளது.

ஆக, ஈரான் – இஸ்ரேல் யுத்தம் விஸ்தீரணப்படுகிறதேயன்றி, ஒடுங்குவதாக இல்லை.

இந்நிலையில் இலங்கையிலும் எரிபொருளுக்கான தட்டுப்பாடுகள் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்கள் உண்டு.

அதிலும் மேற்கூறப்பட்ட யுத்த சூழ்நிலை வட மாகாணத்தில் எரிபொருளுக்கான கேள்வியை அதிகரிக்கவே செய்யும்.

ஆம், நீண்ட நெடுங்கால யுத்தத்துக்குள் வாழ்ந்த எம் தமிழ் மக்கள், அரசாங்கம் விதித்த பொருளாதாரத் தடையால் அனுபவித்த துன்பங்கள் கொஞ்சமல்ல.

போர்க்கால சூழலில் வானொலியைக் கேட்பதற்குக் கூட பற்றி இல்லாத நிலைமை.

துவிச்சக்கரவண்டியின் டைனமோவை இயக்கி வானொலி கேட்ட அனுபவங்கள் எமக்கு நிறையவே உண்டு.

அதிலும் மண்ணெண்ணெய் மருந்துக்கும் இல்லாதபோது, ஜாம் போத்தலில் குப்பி விளக்கு எரித்து படித்த காலங்களும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பாதுகாப்புப் பிரதேசத்தில் ஒளிரவிடப்பட்ட தெரு மின்விளக்கில் படித்த அனுபவங்களும் எம்மால் ஒருபோதும் மறந்து விட முடியாதவை.

இதற்கும் மேலாக, 2019ஆம் ஆண்டுக்குப் பின் ஏற்பட்ட பொருளாதாரப் பெருமந்தம் எரிபொருளை இல்லாமல் செய்தது.

ஒரு லீற்றர் பெற்றோல் ஐயாயிரம் ரூபாவுக்கு விற்பனையானதை எங்ஙனம் மறக்க முடியும்.

இந்த நிலைமைகள் காரணமாக உலகின் எந்த மூலையில் சண்டை நடந்தாலும் நம் வடபகுதி மக்கள் பெற்றோலுக்கு முந்தியடிக்கின்ற வழமைக்கு உட்பட்டு விட்டார்கள். இஃது பட்டறிவால் ஏற்பட்ட விளைவு.

ஆக, இலங்கையின் எந்தப் பாகத்திலும் இல்லாத – எரிபொருளுக்கான வரிசை நம் வட மாகாணத்தில் இருக்கவே செய்யும்.

எனவே நிலைமை மோசமாகக் கூடிய வாய்ப்புகள் இருப்பதன் காரணமாக, கடைசி வரைக்கும் காத்திருக்காமல் இப்போதே பெற்றோல் விநியோகத்துக்கு கியூஆர் கோட் முறையை நடைமுறைக்குக் கொண்டு வருவது பொருத்தமானது.

நாடு முழுமையிலும் கியூஆர் கோட் நடைமுறைக்கு வரட்டும் என்றில்லாமல், சூழ்நிலைக்கு ஏற்ப கியூஆர் கோட் முறையை வடமாகாணத்தில் அமுல்படுத்தும்போது பெற்றோல் பதுக்கப்படுவது தடுக்கப்படுவதுடன் சமத்துவமான விநியோகத்தை மேற்கொள்ளவும் முடியும்.

ஆகையால் இதுவிடயத்தில் மாவட்ட செயலர்கள் விரைந்து தீர்மானங்களை எடுப்பது சாலச் சிறந்தது.

# தேசிய பாதுகாப்புப் பேரவையை உடனடியாகக் கூட்டுங்கள்

### அரசிடம் சஜித் கோரிக்கை

ஈரான் - இஸ்ரேல் போரின் விளைவுகள் குறித்து ஆராய்ந்து தீர்வுகளை வழங்க தேசிய பாதுகாப்புப் பேரவையை உடனடியாகக் கூட்டுமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று இது குறித்து சிறப்பு அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள அவர், பாரசீக வளைகுடாவை அரபிக் கடலுடன் இணைக்கும் ஹார்முஸ் நீரிணை மூடப்படுவது எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு துறைகளில் கடுமையான சிக்கலை ஏற்படுத்தும்.

ஆகவே ஒரு நாடு என்ற வகையில் நாம் வேடிக்கை பார்க்காமல் தேசிய பாதுகாப்புப் பேரவைக் கூட்டத்தை நடத்தி எழுந்துள்ள கடுமையான பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்க வேண்டும்.

மத்திய கிழக்கில் பணிபுரியும் தொழிலாளர்களின் உயிருக்குப் பாதுகாப்பு அளிப்பது குறித்து ஆராய வேண்டும். ஆகவே உடனடியாக பாதுகாப்புப்பேரவையைக் கூட்ட வேண்டும் என வலியுறுத்தினார். (ம-7)

### புயலால் புரண்டது படகு

# தற்துணிவோடு 15 கடல்மைல் நீந்தி உயிர் தப்பிய மீனவர்

யாழ்.குடாநாட்டில் நேற்று முன்தினம் வீசிய மினி சூறாவளியின் தாக்கம் காரணமாக பருத்தித்துறை கடற்பரப்பில் கடற்தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவரொருவரது படகு கவிழ்ந்துள்ளது.

இருப்பினும் குறித்த மீனவர் தற்துணிவோடு சுமார் 4 மணித்தியாலங்கள் நீந்தி 15 கடல்மைல் தூரத்தைக் கடந்து மற்றொரு படகிலேறி உயிர் தப்பியுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை(22) இரவு 7.00 மணியளவில் காற்றுடன் பலத்த மழை பெய்த போது கட்டைக்காட்டில் இருந்து கடற்தொழிலுக்குச் சென்ற கட்டைக் காட்டைச் சேர்ந்த நீக்கிளாஸ் கேடிஸ் (வயது - 36) என்ற மீனவரின் படகு கடும் காற்று காரணமாக புரண்டுள்ளது.

இதனால் படகில் இருந்த வெளிஇணைப்பு இயந்திரம், வலைகள், தொலைபேசி என்பன கடலில் மூழ்கியுள்ளன.

படகு மூழ்கிய நிலையில் சுமார் 15 கடல் மைல் தூரம் நீந்திச் சென்று அதிகாலை ஒரு மணியளவில் அப்பகுதியிலிருந்த படகில் ஏறி உயிர் தப்பியுள்ளார்.

தற்சமயம் அவர் சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-7,60)

# அணையா விளக்குப் போராட்டம் வெற்றியடைய ஆதரவு தாருங்கள்

### ஏற்பாட்டாளர்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - செம்மணி சித்துப்பாத்தி இந்து மயானத்தில் அடையாளம் காணப்பட்ட மனித புதைக்குழிக்கு நீதிகோரி மக்கள் செயல் அமைப்பின் ஏற்பாட்டில் "அணையா விளக்கு" எனும் மூன்று நாட்கள் தொடர் போராட்டம் யாழ்ப்பாணம் நல்லூர் வளைவிற்கு அருகில் நேற்றையதினம் காலை ஆரம்பமாகி தொடர்ந்தும் இடம்பெற்று வருகிறது. இரவுப்பொழுதில் கதைபடித்தல், ஆவணப்பட திரையிடல் போன்றன இடம்பெறுகின்றன.

இப் போராட்டத்தை தங்கு தடையின்றி சிறப்புற முன்னெடுத்துச் செல்ல இந்தப் போராட்டத்திற்கான மலர்கள், திரி, தேங்காய் எண்ணை மற்றும் மின்பிறப்பாக்கிக்கான பெற்றோல் போன்றவற்றை தரக்கூடியவர்கள் தந்துதவுமாறும், போராட்டக்களத்தில் இருக்கக்கூடியவர்களுக்கான உணவு, நீர் வசதிகளையும் தந்துதவி போராட்டத்தை வெற்றியடைய வலுச் சேர்க்குமாறு ஒருங்கிணைப்பாளர்களால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ம-7)

### கடந்த ஐந்து மாதங்களில்

## இரண்டு தொன் போதைப்பொருள்

### பறிமுதல் செய்யப்பட்டதாக அறிவிப்பு

கடந்த 5 மாதங்களில் 02 தொன் ஹெரோயின் மற்றும் ஐஸ் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதாகப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

சர்வதேச போதைப் பொருள் ஒழிப்பு தினம் தொடர்பில் அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இதனைக் கூறினார்.

இதன்போது புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததிலிருந்து இன்று வரை மேற்கொள்ளப்பட்ட போதைப்பொருள் சோதனைகள் தொடர்பில் பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய கருத்து வெளியிட்டார்.

இதுவரையான காலப்பகுதியில் ஆயிரத்து 253 கிலோகிராம் ஹெரோயினும் 2 ஆயிரத்து 121 கிலோகிராம் ஐஸ் போதைப்பொருளும் 12 ஆயிரத்து 439 கிலோகிராம் கஞ்சாவும் 22 கிலோகிராம் கொக்கெய்னும் 1.6 மில்லியன் போதை மாத்திரைகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார். (ம-7)

# கடற்கொந்தளிப்பு குறித்த எச்சரிக்கை

இலங்கையைச் சூழவுள்ள கடற்பிராந்தியங்கள் கொந்தளிப்பாகக் காணப்படக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம்எச்சரிக்கை விடுத்துள்ளது.

சிலாபத்திலிருந்து மன்னார் ஊடாக காங்கேசன்துறை வரையிலும் மாத்தறையிலிருந்து பொத்துவில் ஊடாக ஹம்பாந்தோட்டை வரையான கடற்பிராந்தியங்களிலும் கடல் கொந்தளிப்பாக இருக்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

எனவே கடற்றொழிலாளர்கள் இது தொடர்பில் அவதானத்துடன் செயற்படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.(ம-7)

# யாழ்ப்பாணக் கல்வி வலய மாணவர் பாராளுமன்ற அமர்வு

யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகத்தின் தலைமையில் 2025ஆம் ஆண்டுக்கான யாழ்ப்பாணக் கல்வி வலய மாணவர் பாராளுமன்ற அமர்வானது எதிர்வரும் வெள்ளிக்கிழமை புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி வளாகத்தில் காலை 11.00 மணியளவில் இடம்பெறவுள்ளது.


யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி மாலதி முகுந்தன் வலய மாணவர் பாராளுமன்றத்தின் செயலாளர் நாயகமாக நிகழ்வுக்குத் தலைமை தாங்கவுள்ளார்.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக, வடக்கு மாகாணக் கல்வி, பண்பாட்டு அலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் உதவிச் செயலாளர் சுபாஸ்கரன் அவர்கள் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுச்சேரி பயணம் 12

புருசோத்தமன்




புதுச்சேரிப் பயணத்தின் பயன் யாது? என்று கேட்டால் பாரதியார் புதுச்சேரியில் தங்கியிருந்த வீட்டைத் தரிசித்தது என்பேன்.

ஆம், ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்தில் தேச விடுதலைப் போராட்டத்தில் தன்னை ஈடுபடுத்தியவர் சுப்பிரமணிய பாரதியார்.

அதனால் அவரை ஆங்கிலேயர்கள் கைது செய்வதற்காகத் தேடிய போது, பாரதியார் தனது குடும்பத்துடன் புதுச்சேரியில் உள்ள ஓர் வீட்டில் அடைக்கலம் புகுந்திருந்தார்.

பத்து ஆண்டுகள் பாரதியார் வாழ்ந்த அந்த வீட்டை புதுச்சேரி மாநில அரசு அருங்கலைப் பொக்கிசமாகப் பாதுகாத்து வருகிறது.


தமிழகத்தில் ஆங்கிலேயரின் ஆட்சி நிலவிய காலத்தில் புதுச்சேரியில் பிரான்ஸின் ஆட்சி இடம் பெற்றது.

இதனால் புதுச்சேரியில் தங்கியிருந்த பாரதியாரைக் கைது செய்கின்ற அதிகாரம் ஆங்கிலேயருக்கு இருக்கவில்லை.

இங்கு தான் ஆங்கிலேயர்களதும் பிரான்ஸியர்களதும் ஆட்சிகள் சட்ட வரண் முறைக்கு உட்பட்டு இடம் பெற்றமை தெரியவருகிறது.

சுப்பிரமணிய பாரதியார் புதுச்சேரியில் தங்கியிருந்த போது தான், புதுச்சேரியைச் சொந்த இடமாகக் கொண்ட பாரதிதாசனுக்குப் பாரதியாரின் தொடர்பு கிடைக்கப் பெற்றது.

பாரதிதாசன் மட்டுமன்றி, தேச விடுதலையின் பால் ஈர்க்கப்பட்ட பலரும் பாரதியாரின் வீட்டிற்குச் சென்று இந்திய தேசத்தின் எதிர்காலம் பற்றியும் அந்நியர்களுக்கு எதிராகப் போராட வேண்டிய தன் தேவை பற்றியும் ஆராய்ந்ததான தகவல்களும் ஆவணங்களும் அங்கு பேணப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.



அமைதியான சூழல், அகன்ற வீதியின் ஓரத்தில் அமைந்த பாரதியாரின் இல்லிடம், எங்கள் மண்ணில் கூட்டுக் குடும்ப வாழ்வியலை அடையாளப்படுத்துகின்ற நாற்சார வீட்டை ஒத்ததாகக் காணப்படுகிறது.

திண்ணைப் பண்பாட்டின் அடையாளமாக விளங்கக் கூடிய பாரதியார் வாழ்ந்த வீட்டைப் பார்ப்பதற்கு ஒவ்வொரு நாளும் மக்கள் வந்து செல்கின்றனர்.




புதுப்பிக்கப்பட்ட புதுச்சேரி பாரதியார் இல்லம்

புதுச்சேரிக்குச் சுற்றுலா வருகின்றவர்கள், தாம் பார்க்க வேண்டிய இடங்களின் பட்டியலில் பாரதியார் தங்கியிருந்த வீட்டைக் கட்டாயமாகப் பதிவிட்டிருப்பர். அந்தளவிற்கு பாரதியார் வாழ்ந்த வீடு முக்கியத்துவம் பெற்றுள்ளது.

தவிர, பாரதியார் வாழ்ந்த வீட்டில் பாரதியாரின் கவிதைகள் அவரின் கையெழுத்துப் பிரதியாகப் பேணப்பட்டு வருவது பார்ப்போரை வியக்க வைக்கும்.

இதையும் கடந்து பாரதியாரின் குடும்பம், பாரதிதாசனும் பாரதியாரும் சேர்ந்திருக்கின்ற புகைப்படம் என பாரதியாரின் வாழ்வியலோடு சம்பந்தப்பட்ட புகைப்படங்கள், ஆவணங்கள் என்பன பாரதியார் வாழ்ந்த வீட்டில் மிகவும் பக்குவமாகப் பேணப்பட்டு வருவது இங்கு குறிப்பிடத்தக்கது.



இதற்காக அலுவலர்கள் அங்கு கடமையில் ஈடு பட்டுள்ளனர்.

தவிர, அங்குள்ள படங்கள் மற்றும் ஆவணங்களைப் புகைப்படம் எடுத்துக் கொள்வது முற்றுமுழுதாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையில்...

தற்போதைய போர்ச் சூழ்நிலையை எதிர்கொண்டு எதிர்காலத்தில் எண்ணெய் தொடர்பாக நெருக்கடி நிலை ஏற்பட்டால் தேவையான நடவடிக்கைகளை எடுக்கத் திட்டமிட்டுள்ளதாக இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

இதற்கிடையில் மத்திய கிழக்கில் நிலவும் ஸ்திரமின்மை காரணமாக, ஈரான் ஹோர்முஸ் ஜலசந்தியை மூட முயற்சிக்கும் சூழலில் உலக எரிபொருள் விலைகள் அதிகரித்துள்ளன.

அமெரிக்காவின் தாக்குதலுக்குப் பிறகு, உலக எரிபொருள் போக்குவரத்தில் முக்கிய புள்ளியான ஹோர்முஸ் ஜலசந்தியை மூட ஈரான் முயற்சிக்கிறது.

அந்தச் சூழ்நிலையுடன் எழுந்துள்ள ஸ்திரமின்மையை எதிர்கொண்டு இன்று உலக எரிபொருள் விலைகளும் அதிகரித்துள்ளன.

அதன்படி 3 சதவீத விலை அதிகரிப்புடன் பிரெண்ட் சந்தை எரிபொருளின் பீப்பாய் ஒன்றின் விலை சுமார் $79 ஆக பதிவாகியுள்ளது.

இந்த நிலை தொடருமானால் எதிர்காலத்தில் எண்ணெய் விலை மேலும் அதிகரிக்கக்கூடும் என்று ஆய்வாளர்கள் கணித்துள்ளனர்.

தற்போதைய நிலைமை குறித்து, உள்நாட்டுச் சந்தையில் எண்ணெய் விலையில் இந்த நேரத்தில் எந்த மாற்றமும் இருக்காது என்று இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

இருப்பினும், தற்போதைய நெருக்கடி நிலை ஏற்பட்டால் நிலைமையைக் கட்டுப்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கத் திட்டமிட்டுள்ளது என்று இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது. (ம-7)

## பச்சிலைப்பள்ளி...

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தவிசாளர் தெரிவு வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தேவநந்தினி பாபு தலைமையில் பச்சிலைப்பள்ளி பிரதேச சபை சபா மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்ந்த சுப்பிரமணியம் சுரேனின் பெயர் பரிந்துரைக்கப்பட்டபோது ஏனைய தெரிவு இல்லாத நிலையில் சுப்பிரமணியம் சுரேன் தெரிவு செய்யப்பட்டார்.

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையில் இலங்கைத் தமிழரசுக்கட்சி சார்பாக 06 உறுப்பினர்களும் தேசிய மக்கள் சக்தி சார்பாக 03 உறுப்பினர்களும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி சார்பாக 03 உறுப்பினர்களும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் சார்பாக 01உறுப்பினரும் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. உப தவிசாளராக சிவகுரு செல்வராசா தெரிவு செய்யப்பட்டார். (ம-7,104,316)

## சாவகச்சேரி...

யின் தவிசாளர் மற்றும் பிரதித் தவிசாளரைத் தெரிவு செய்வதற்கான கூட்டம் நேற்று சாவகச்சேரி பிரதேச சபை சபா மண்டபத்தில் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தேவநந்தினி பாபு தலைமையில் நடைபெற்றது.

தவிசாளர் பதவிக்காக இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி சார்பில் போட்டியிட்ட பொன்னையா குகதாசன் 10 வாக்குகளையும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி சார்பில் போட்டியிட்ட செல்வரத்தினம் மயூரன் 10 வாக்குகளையும் பெற்றனர்.

தேசிய மக்கள் சக்தியின் ஆறு பேரும் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸின் ஒருவரும் வாக்களிப்பின் போது நடுநிலை வகித்தனர்.

போட்டியிட்ட இருவரும் சமமான வாக்குகளைப் பெற்றதால் திருவுளச் சீட்டு மூலம் தவிசாளராகப் பொன்னையா குகதாசன் தெரிவானார்.

உப தவிசாளராக அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸின் சார்பில் போட்டியிட்ட இராமநாதன் யோகேஸ்வரன் தெரிவானார்.

28 உறுப்பினர்களைக் கொண்ட சாவகச்சேரி பிரதேச சபைக்காக நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி 8 ஆசனங்களையும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் 7 ஆசனங்களையும் தேசிய மக்கள் சக்தி 6 ஆசனங்களையும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி மற்றும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி ஆகியன தலா ஒரு ஆசனத்தையும் கைப்பற்றியது.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் உறுப்பினர் ஒருவர் நீதிமன்ற இடைக்கால தடையுத்தரவு காரணமாக தவிசாளர் தெரிவுக்கு சமுகமளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ம-7,30,33)

## மூச்சுவிட...

மீசாலையில் மூச்சுவிட கஷ்டப்பட்ட எட்டு மாதப் பெண் குழந்தை ஒன்று நேற்று மரணமடைந்துள்ளது.

இதில் மீசாலை கிழக்கைச் சேர்ந்த திலக்சன் திசாரா என்ற எட்டு மாதப் பெண் குழந்தையே மரணமடைந்துள்ளது.

மேற்படி குழந்தையை அழைத்துக் கொண்டு முழுங்காவிலில் உள்ள உறவினர் வீடு ஒன்றுக்கு பெற்றோர் சென்றிருந்தபோது அங்கு குழந்தை மூச்சு விட கஷ்டப்பட்ட நிலையில் முழுங்காவில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் குழந்தை நேற்று திங்கட்கிழமை (23) அதிகாலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளது.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)

## அமெ...

மீது மேற்கொண்ட தாக்குதலுக்குப் பதிலடி கொடுக்கப்படும் என ஈரான் எச்சரிக்கை விடுத்திருந்த சில மணி நேரங்களுக்குப் பின்னர் இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஈரான் நாட்டின் அணுசக்தி நிலையங்கள் மீது அமெரிக்கா தாக்குதல் மேற்கொண்ட நிலையில், நேற்று மீண்டும் ஃபோர்டோவில் உள்ள ஈரானின் நிலத்தடி யுரேனிய செறிவூட்டல் நிலையம் மீது இஸ்ரேல் தாக்குதல் மேற்கொண்டுள்ளதாக ஈரானிய அரசு தொலைக்காட்சி தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் - ஈரான் இடையேயான போர் தீவிரமடைந்துள்ளது. கடந்த ஒரு வாரமாகவே மோதல் தொடர்ந்தது. இரு நாடுகளும் மாறி மாறித் தாக்கிக் கொண்டன.

இஸ்ரேலின் மூன்று அணு ஆலைகள் மீது அமெரிக்கா மிகப் பெரிய தாக்குதலை நடத்தியது. இது உலக அளவில் பாரிய அதிர்வலையை ஏற்படுத்தியுள்ளது. (ம-7)

## வடமராட்சி...

குடத்தனைக்கு குறித்த நபர்கள் சென்று கொண்டிருந்தபோது வழிமறித்து குறித்த தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

வாள்வெட்டில் படுகாயமடைந்தவர்கள் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். (ம-7)


மஹஜன சம்பத
திகதி 2025.06.23
சீட்டிழுப்பு இலக்கம் 5869
H 4 8 1 2 6 7
அத சம்பத
H 1 2 6 7
சீட்டிழுப்பு இலக்கம் 444
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2025.06.23
சீட்டிழுப்பு இலக்கம் - 1899
F 09 33 34 53 F
Double Chance 49357

மெகா பவர்
திகதி 23/06/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2217
I 03 01 11 36 52

ஜய ஜய (NLB)
திகதி 2025.06.23
சீட்டிழுப்பு இலக்கம் 0137
W 5 5 9 3

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4111
சீட்டிழுப்பு திகதி 23.06.2025
R 11 21 30 75
R

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.06.23
சீட்டிழுப்பு இலக்கம் 1178
மேடம் 14 31 33 45 மேடம்
25737 32

உத்தியோகபூர்வ முடிவுகள்
23.06.2025 வெற்றி வாரம் 577
V 6 2 1 2 9 2
80389
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.21,786,510.40
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2843
சீட்டிழுப்பு திகதி 2025.06.23 தினம் திங்கட்கிழமை
46 52 55 74 S
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 70,245,187.20
DLB

சனிதா
திகதி 23.06.2025 வெற்றி வாரம் 5004
12 26 56 61 U
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 68,969,918.80
75332
DLB

ஜயோதா Jayoda
திகதி 2025.06.23 வெற்றி வாரம் 2137
06 30 49 62 N
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 30,020,208.80
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4555
சீட்டிழுப்பு திகதி 23.06.2025 தினம் திங்கட்கிழமை
11 18 51 59 கன்னி
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,268,420.40
244055
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
J 08 09 16 48 74
2019
23.06.2025 திங்கட்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.579,179,303.40
DLB


அட கோடிபதி ADA KOTIPATHI
திங்கட்கிழமை
வெற்றி வாரம் : 2669
சீட்டிழுப்பு திகதி : 2025.06.23
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.65,418,002.40
08 21 43 58 S
780432
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 15 - 04 - 1940

மறைவு 22 - 06 - 2025



## நாகமுத்து இராசதுரை
### (சின்னமணி)

நிற்சாமம் சங்கானையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட நாகமுத்து இராசதுரை (சின்னமணி) அவர்கள் கடந்த (22.06.2025) ஞாயிற்றுக்கிழமை அன்று இறைபதமடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.06.2025) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நிற்சாமம்,
சங்கானை.

தகவல்: குடும்பத்தினர்
077 204 3606

(4624)


வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-3255)

076 825 7716 (ஆகாஸ்)

**வலம்புரி** விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127

**வைத்தியம்**

கை விறைப்பு | கால் விறைப்பு | கை எரிவு | கால் எரிவு
குழந்தை இன்மை | நாட்பட்ட தலைவலி
மூலம் | கழுத்து வலி | கால் பாத விறைப்பு
முள்ளந்தண்டு வலி | முழங்கால், குதி வலி
Sciatica | Rheumatic Arthritis | நாட்பட்ட சளி
தலைக்கு இரத்தம் போகாமை, வாதம்
நம்பிக்கையான மூலிகை, Acu சிகிச்சைகள்
நல்லூர், யாழ்ப்பாணம்.
Dr R. சிவகுருநாதன் (SLAMC REGD)
தொடர்புகளுக்கு : 0777 301 669

(4625)

**கனடா - வரி இல்லாமல்**
**விரைவு பொதிகள் சேவை**

5-9 Kg 3960/-
11-16 Kg 2790/-
21-30 Kg 2650/-

குறைந்த விலை -நிறைந்த சேவை
கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
14 நாட்களில் Delivery

UK 11Kg - 1400/- | France 11Kg - 2220/- | Germany 11Kg - 2020/-
Swiss 11Kg - 2500/- | Australia 11Kg - 1980/- | Italy 11Kg - 2260/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம் (Metro Branch), சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

**V2 TRAVELS** 076 822 6241 / 076 822 6237 (C-3256)

**விசேட சலுகைகள்**

வெளிநாடுகளுக்கான 11Kg ற்கு மேற்பட்ட பொதிகளுக்கான 1Kg க்கான கட்டணம்

UK - 1380/= | Australia - 2130/=
France - 1930/= | Germany - 1880/=

மற்றைய நாடுகளுக்கும் விசேட சலுகைகள்
077 755 4528

**திருமுருகன் பொதிகள் சேவை**
321, K.K.S Road, Jaffna (1257)

கிளைகள் : கொழும்பு, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, மல்லாவி

**உடனடி வேலைவாய்ப்பு**

அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனத்திற்கு உத்தியோகத்தர்கள் தேவை. (A/L படித்தவர்கள் விரும்பத்தக்கது) 5 நபர்கள் முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர். (1256)


077 408 8241

**வெளிநாட்டில் வசிக்கும் மணமகளிற்கு மணமகன் தேவை**

1993 இல் பிறந்த கனடாவில் வசிக்கும் மணமகளுக்கு உள்நாட்டில்/ வெளிநாட்டில் வசிக்கும் மணமகன் தேவை. (1256)

077 335 3461


# நீங்காத நினைவலைகளில் 16 ஆண்டுகள்...



## அமரர் சுப்பிரமணியம் நாகராஜா
### (Retired MSO Jaffna Post Office)

மலர்வு 18.07.1930

உதிர்வு 22.06.2009

திதி : சதுர்த்தசி 24.06.2025 செவ்வாய்க்கிழமை

அப்பா உங்கள்
**ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.**

எங்கள் குடும்பத்தின் குலவிளக்காக நம் குடும்பத்தின் வளர்ச்சிக்காக அயராது உழைத்து அனைவரது வாழ்வினையும் பிரகாசிக்கச்செய்த அமரர் சுப்பிரமணியம் நாகராஜா அவர்களது ஆத்ம சாந்திக்காக 24.06.2025 செவ்வாய்க்கிழமை (இன்று) கைதடி வீரகத்திப் பிள்ளையார் கோயிலில் பர்வதவர்த்தினி அம்பாள் சமேத இராமலிங்க சுவாமிக்கு மோட்ச அபிசேக ஆராதனைகள் இடம்பெற்று சுன்னாகம் வாழ்வக விழிப்புல வலுவிழந்தோர் இல்லம், வவுனியா ஸ்ரீ அகிலாண் டேஸ்வரி அருளக முதியோர் இல்லம், புதுக்குடியிருப்பு இனிய வாழ்வு இல்லம் ஆகிய பராமரிப்பு நிலையங்களிலுள்ள சிறுவர்கள், முதியோர்களுக்கு விசேட மதிய உணவும் வழங்கப்படும். (1255)

தகவல் : குடும்பத்தினர் சார்பாக
மகன் நாகராஜா விஜயகுமார் (சங்கர்) சுவிஸ்

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் ... ரோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.06.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org